JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 05 | July 2024 | Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 | Single Copy ₹ 10

"ஒரு தனி மனிதனை ஏவி, எழுப்பி,
சுவிசேஷத்தின் நற்செய்தியை அறிவிக்கத் தூண்டுவதே,
தேவன் மீது கொண்டுள்ள **தீராத**..."

# தாகம்...



# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

SMS

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.

## சந்தா விவரம்

தனிப்பிரதி ₹10/-

ஆண்டு சந்தா ₹100/-

ஆயுள் சந்தா ₹1000/-



அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

## உள்ளே...



04


14


22



30


**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும்
வாலிபர் உலகம் பத்திரிக்கை
உங்கள் கையில் உள்ளதா?


JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்



# தணியாத தாகம்!

எனக்கு மிகவும் பிரியமான வாலிப மகளே(னே),

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! வாலிபர்களாகிய உங்களை தேவன் ஒரு பெரிய நோக்கத்தோடு உண்டாக்கி, உருவாக்கி, பெலப்படுத்தி, வடிவமைத்து வருகிறார் என்பதில் சந்தேகமே இல்லை. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு புதிய சவால்களினால் நீங்கள் கடந்து போவதை உணருகிறேன். அந்த எல்லா சவால்களையும் சமாளித்து மேலே உயரமாக எழும்பும் ஒரு கூட்டம் உண்டு. அதே நேரத்தில் அந்த சவால்களை சந்தித்து துவண்டுபோய் சோர்ந்து போகிற ஒரு கூட்டமும் உண்டு. நீங்கள் சமாளிக்கிற வாலிபர்கள் மட்டும் அல்ல சாதிக்கிற வாலிபர்கள் என்பதை நினைவுகூர வேண்டும். எலியாவைப் போல, கர்த்தரே தேவன் என்று நிரூபிக்கிறவர்கள் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். எத்தனை முறை சாத்தான் உங்களை சோதித்து, வீழ்த்தி, அழிக்க நினைத்தாலும் உங்களை பாதுகாத்து பராமரிக்க இயேசு இருக்கிறார் என்பதை மறக்க வேண்டாம்.

இன்றைக்கு உலகத்திலுள்ள அநேக வாலிபர்களுக்கு பல ஆசைகளும், தாகமும் உண்டு. அதைத்தேடிச் சென்று வாழ்க்கையில் பல இன்னல்களை சந்திக்கிறார்கள். ஆனால் தேவ பிள்ளைகளாகிய உங்களுடைய தாகமும், ஆசையும் தேவன் மேலும், அவருடைய சித்தத்தை செய்வதிலும் இருந்தால், மேன்மையைக் காண முடியும்.

இங்கிலாந்து தேசத்தை சார்ந்த வாலிபன் வில்லியம் கேரி, ஒரு சாதாரண செருப்பு பழுது பார்க்கும் வேலை செய்தவர். ஆனால் இந்தியாவிற்கு சுவிசேஷத்தை எடுத்து செல்ல வேண்டும் என்பதே அவருடைய தீராத தாகமாக இருந்தது. தான் வேலை செய்யும் இடத்திலும் இந்திய வரைபடத்தை விரித்து வைத்து ஜெபித்துக் கொண்டே இருப்பார். சுவிசேஷத்தைஅறிவித்திட தன்னையே அர்ப்பணித்து, பல இன்னல்கள், இழப்புகள் மத்தியில் இந்திய தேசத்திற்கு சுவிசேஷத்தை மாத்திரமல்ல, வேதாகமத்தை Bengali, Oriya, Marathi, Hindi, Assamese மற்றும் Sanskrit போன்ற மொழிகளில் மொழிபெயர்ப்பும் செய்தார். மேலும் 29 மொழிகளில் வேதாகமத்தின் சில பகுதிகளை மட்டும் மொழிபெயர்த்தார். இப்படி தேவனுக்காக பெரிய காரியங்களை சாதிக்க காரணம், தேவன் மேல் அவர் கொண்டிருந்த தணியாத தாகம்.

''தேவனிடத்தில் பெரிய காரியங்களை எதிர்பார்; தேவனுக்காக பெரிய காரியங்களை செய்''

என்பதே அவருடைய தாரக மந்திரமாக இருந்தது.

தேவன் மீது தாகம் கொண்டு; தேவனுக்காக தன்னை தந்தவர்கள் அநேகர்.

அந்த பட்டியலில் நீயும் ஒரு தாகமுள்ள போர் சேவகனாக தொடர்ந்து, எழுந்து எழுப்புதலுக்காக போராடு!

தேவன் பயன்படுத்த தேடும் அடுத்த வில்லியம் கேரி நீயாக இருக்கலாமே!

ஜெபித்து செயல்படு!

கிறிஸ்துவின் பணியில்

**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: ஜாய்லின் ஜான்



# கணினியில் கரைக்கண்டார்...

சகோ. காட்வின்

**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, ஆவிக்குரிய வாழ்வில் வளர்க்கப்பட்டு, படிப்பில் கொஞ்சம் கூட ஈடுபாடு இல்லாவிட்டாலும், கம்ப்யூட்டரில் அதிக ஆர்வம் இருந்ததால், அதையே தன் மூச்சாகக் கொண்டு செயல்பட்டு, இன்றைக்கு ஒரு பெரிய தொழில்நுட்ப தொழிலதிபராக இருக்கும் சகோதரர் காட்வின் அவர்கள் கடந்து வந்த பாதைளைப் பற்றி அவரிடம் கேட்டு தெரிந்து கொள்வோமா?**

**காட்வின் இன்று உங்களை வெற்றியுள்ள ஒரு தொழிலதிபராகப் பார்க்கிறோம். பள்ளியில் படிக்கும்போதே நன்றாக படிப்பீர்களா? அல்லது இது காலப்போக்கில் உருவானதா?**

நான் எனது சிறு வயதிலிருந்தே மிகவும் மோசமாகத்தான் படித்து வந்தேன். 6ம் வகுப்பிலிருந்து 12ம் வகுப்பு வரை தொடர்ந்து தோல்வியைத்தான் சந்தித்தேன். **Annual Exam**ல் மட்டும் எப்படியோ வெற்றி பெறுவேன். அதிலும் 7ம் வகுப்பில் **fail** என்று வந்த ரிப்போர்ட், திரும்ப எப்படி **pass** என மாறியது என்று இன்றைக்கு வரைக்கும் எனக்கு தெரியவில்லை. எப்படியோ **pass** பண்ணி அற்புதமாக ஒவ்வொரு பகுதியிலும் கர்த்தர் என்னை நடத்தி வந்தார். படிப்பு தான் எனக்கு சரியாக வரவில்லை. ஆனால் **computer**ல் ஏதாவது சாதிக்க வேண்டுமென்ற ஆசை அதிகம் இருந்தது. அதனால் எப்போதும் கம்ப்யூட்டரிலேயே அதிக நேரத்தை செலவழித்துக் கொண்டிருந்தேன். இதனால் 10ம் வகுப்பு படிக்கும்போது கம்ப்யூட்டரை எனக்கு கொடுக்காமல், வீட்டில் மறைத்து வைத்து விட்டார்கள். இதனால் நான் தேர்வு என்றைக்கு முடியுமோ, அன்றைக்கே ஒரு புதிய கம்ப்யூட்டரை வாங்க



வேண்டுமென்ற உறுதியோடு இருந்தேன். படிப்பு எனக்கு மிகவும் கடினமாகவே இருந்து வந்தது.



**பழப்பில் சந்தித்த சவால்களை கொஞ்சம் சொல்ல முடியுமா?**

சிறு வயதில் இருந்தே, கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் எனக்கு கடினமாக இருந்தன. எவ்வளவு படித்தாலும் டியூஷன் போனாலும் வெற்றி என்பது எட்டாக் கனியாகவே இருந்தது. அந்நேரங்களில் 'தேவனைப் பற்றிக் கொள்' என்று அம்மா அடிக்கடி சொன்ன வார்த்தைகள் எனக்கு ஆறுதலைக் கொடுத்தது. **"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13)** என்ற வசனத்தை நான் உறுதியாக பற்றிக் கொண்டேன்.

**சரி... கடினமான கல்வி பாதையை அம்மாவின் ஆலோசனையோடும் கர்த்தரின் துணையோடும் எப்படி கடந்தீர்கள்?**

10ம் வகுப்பு பொதுத் தேர்வு என்பதால் காலை 6 மணிக்கு டியூஷன் ஆரம்பித்து இரவு 10 மணி வரைக்கும் இருக்கும். எப்பொழுதும் நான் engaged ஆகவே இருப்பேன். இரவு 10 மணிக்கு தான் வீட்டிற்கு வருவேன். இது தவிர படிப்பில் மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு பள்ளியில் study லீவும் கிடையாது. தினமும் காலையிலிருந்து மாலை வரைக்கும் எங்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ் நடைபெறும். பள்ளியில் எல்லாமே படித்து முடித்தேன், 'எல்லாமே நன்றாக படித்து விட்டோமே' என்று பொதுத் தேர்வு எழுதச் சென்று கேள்வித்தாளைப் பார்த்தபோது, நான் படித்த எதுவும் எனக்கு ஞாபகம் வரவில்லை. எல்லாமே மறந்து போயிருந்தது. எப்படியோ ஒருவழியாக தேர்வு எழுதி முடித்துவிட்டு ஜாலியாக இருந்தேன். ரிசல்ட் வருகிற முந்தின நாள் இரவு தான் ''இயேசுவே என்னை காப்பாற்றும், fail ஆகிவிட்டால் நான் என்ன செய்வது''? என்ற பயம் உண்டானது. தேர்வு முடிவு வெளியாகி ஒரு வழியாக வெற்றியும் பெற்றேன். ஆண்டவர் என்னை அற்புதவிதமாக 10ம் வகுப்பை முடிக்க கிருபை செய்தார். மதிப்பெண் குறைவாக இருந்தாலும் எனக்குள் ஒரு மகிழ்ச்சி இருந்தது.

**அற்புதம்...! சரி, ஒருவழியாக 10ம் வகுப்பு முடித்தீர்கள்... 12ம் வகுப்பு எப்படி படித்தீர்கள்?**

10ம் வகுப்பில் எப்படி டியூஷனுக்கு சென்று படித்தேனோ, அதேபோல 12ம் வகுப்பிலும் படித்தேன். தேர்வு எழுதி முடித்துவிட்டு, விடுமுறையை சந்தோஷமாக கழித்தேன். தேர்வு முடிவுகள் வெளிவரும் முந்தின நாள் இரவு நான் தூங்கவே இல்லை. வெற்றி பெறுவோமா மாட்டோமா? எத்தனை மார்க் கிடைக்கும் என்று யோசித்து யோசித்து என்னால் தூங்கவே முடியவில்லை. ரிசல்ட் வருகிற அன்றைக்கு சரியாக இன்டர்நெட் கிடைக்காததால் என்னால் ரிசல்ட் பார்க்க முடியவில்லை. என்னுடைய தலைமை ஆசிரியரின் மகன் என்னுடன் படித்ததால் அவன் என்னுடைய ரிசல்ட்டைப் பார்த்து விட்டு எங்கள் வீட்டிற்கு போன் பண்ணினான். எனது அம்மா போன் எடுத்து பேசும்போது, Praise Jesus என்று சொன்னார்கள். அப்பொழுதுதான் எனக்கு உயிரே வந்தது. Okay நான் ஜெயித்து விட்டேன்





என்ற ஒரு சந்தோஷம் வந்தது. 12ம் வகுப்பு வெற்றிபெற்று ஒருவழியாக கல்லூரியிலும் சேர்ந்தேன். நான் கம்ப்யூட்டரில் அதீத ஆர்வம் கொண்டிருந்தபடியால் கல்லூரியில் **B.E.Computer Engineering** எடுத்து படித்தேன். கல்லூரியில் கர்த்தர் என்னை பல மாற்றங்களுக்குள்ளாக நடத்தி சென்றார்.

**சூப்பர்... கல்லூரியில் படிக்கும்போது நடந்த மாற்றங்கள் தான் என்ன?**

கல்லூரி 3ம் ஆண்டு படிக்கும்போது விடுமுறைக்காக வீட்டிற்கு வந்த நேரத்தில் எனது அப்பாவுக்கு தெரிந்த ஒரு மருத்துவருக்கு **software** பண்ண வேண்டும் என்று சொன்னார். நான் இப்பொழுது தான் படித்துக் கொண்டிருக்கிறேன், கம்ப்யூட்டர் தெரியும், ஆனால் என்னால் எப்படி **software develop** பண்ண முடியும்? என்று அப்பாவிடம் கேட்டதற்கு, 12ம் வகுப்பு படிக்கும்போதே உனக்கு கம்ப்யூட்டர் தெரியும். அப்படின்னா இப்போ உனக்கு என்ன தான் தெரியும்? உன்னால் இந்த **softwareஐ develop** பண்ண முடியாதா? என்று கேட்டார். அப்பா இப்படி கேட்டு விட்டார் என்று நான் அந்த மருத்துவரிடத்தில், ஆர்டர் எடுத்து 2 மாதத்தில் கொடுக்கிறேன் என்று சொல்லி **payment advance** வாங்கி வந்தேன். எப்படி **software develop** பண்ண வேண்டும் என்று எனக்கு தெரியாது.



என்னவெல்லாமோ செய்து பார்த்தேன். 1 மாதம் முடிந்தும் எதுவும் பண்ணவில்லை. ஒருநாள் கம்ப்யூட்டர் முன்புபோய் உட்கார்ந்து ''இயேசுவே நான் என்ன செய்வது'' என்று ஒரே குழப்பத்துடன், எனக்கு தெரிந்த **IT** படித்த நண்பர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தபோது யாரும் இல்லை. அதன்பிறகு நிறைய **google search** பண்ணி அவர் கேட்டதை விட அதிகமாக **program** செய்து கொடுக்க தேவன் எனக்கு உதவி செய்தார். நேர்த்தியாக அவர் எதிர்பார்த்ததை விட அதிகமாக செய்து கொடுத்ததால், இதை முடித்தவுடன் அவருடைய மனைவிக்கு ஒரு **program** செய்ய வேண்டும் என்று கேட்டு அதையும் செய்து முடிக்க தேவன் கிருபை செய்தார். இது தான் என்னுடைய முதல் **project**.



**சூப்பர்..! கல்லூரியில் படிக்கும்போதே Software developer ஆகிவிட்டீர்கள். அதன் பிறகு படித்தீர்களா? உங்கள் careerஐ பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

**Computer Engineering** முடித்துவிட்டு ஆஸ்திரேலியாவின் **Sydney**யிலுள்ள **Macquarie university**யில் **Masters in Information Technology** படிக்க தேவன் கிருபை செய்தார். அங்கு படித்த நாட்களில் அநேக தொழிநுட்பக் காரியங்களைக் கற்றுக்கொண்டு **IT** துறையில் சிறந்து விளங்க தேவன் ஞானத்தையும் கிருபையையும் தந்தார். நான் ஆஸ்திரேலியாவில் படித்துக்கொண்டிருந்த போதே, இந்தியாவில் ஒரு டீம் உருவாக்கி அவர்கள் **Software**ல் நிறைய காரியங்கள் செய்து கொண்டிருந்தனர். நான் படித்து முடித்து இந்தியாவிற்கு வந்து **team**ஐ வைத்து பிசினஸ் செய்து கொண்டிருந்தேன். ஒருநாள் மறுபடியும் என் அப்பா என்னிடம் வந்து **Streaming software** ஒன்றை தயாரித்து கொடுக்க சொன்னார். கர்த்தரின் கிருபையால் அதையும் செய்து முடிக்க தேவன் உதவி செய்தார். அதிலிருந்து படிப்படியாக உயர்த்தி அநேக **innovative**

ஆன காரியங்களை வாடிக்கையாளர்கள் கேட்கும் விருப்பத்திற்கேற்ப செய்து கொடுத்தோம். இப்படி bussiness வளர்ந்து பெருக ஆரம்பித்தது.

**தேவனுக்கே மகிமை! Careerல் தேவன் உங்களை ஆசீர்வதித்து உயர்த்தினார். உங்களுடைய திருமண வாழ்க்கை எப்படி இருந்தது?**

2010ம் வருடம் மே மாதம் சுனிதா என்ற அழகான மற்றும் ஜெபிக்கும் ஆவிக்குரிய மனைவியை தேவன் எனக்குக் கொடுத்தார். ஆனால் 12 ஆண்டுகள் குழந்தைக்காக நாங்கள் காத்திருந்தோம். அந்த நேரம் எங்கள் வாழ்வில் மிகவும் கஷ்டமான நேரம் என்றே சொல்லலாம். நாங்கள் எதிர்பாராத விதங்களில் எங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டது. சமுதாயத்தின் மூலம் உண்டான அழுத்தங்கள், வாழ்வின் சந்தேகங்களை தாண்டி தேவனுடைய வாக்குத்தத்தத்திற்காக காத்திருப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. **நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்" (ரோமர் 12:12)** என்ற வசனம் தான் எங்களை வழிநடத்தியது. சபை, குடும்பம், மற்றும் நெருங்கிய நண்பர்கள் எங்களை உற்சாகப்படுத்தியது மட்டுமல்லாமல் அவர்களின் ஆதரவு எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. குழந்தைக்காக நாங்கள் காத்திருந்த நாட்கள் எங்கள் விசுவாசத்தைக் கட்டி எழுப்பியதோடு நிறைய காரியங்களைக் கற்றுக் கொள்ளச் செய்தது. 12 வருடங்களுக்கு பிறகு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி 2023ஆண்டு ஜனவரி மாதம் 17ம் தேதி ஸ்டீவின் நோவா ஜோஷ் என்ற அழகான ஆண் குழந்தையைக் கொடுத்து எங்கள் நிந்தையை மாற்றினார்.




**அல்லேலூயா! தேவன் உங்கள் வாழ்வில் செய்த காரியங்களைப் பார்க்கும் போது மிகவும் பிரம்மிப்பாக இருக்கிறது. சரி தற்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**

2016ம் ஆண்டு சொந்தமாக ஒரு software developing கம்பெனியை (Altrosyn Technologies Private Limited - US based) துவங்க தேவன் உதவி செய்தார். இதில் தற்போது 25க்கும் அதிகமான கற்றுத் தேர்ந்த developersஐ வைத்து புதிய தொழிநுட்ப softwaresகளை உருவாக்கி வருகிறோம். 2000திற்கும் அதிகமான projects செய்து கொடுக்க தேவன் உதவி செய்துள்ளார். அதுமட்டுமல்லாமல் CD TECH INNOVATIONS PRIVATE LIMITED என்ற மற்றொரு Indian based IT companyயையும் தேவன் தந்து அதில் 25 பேர் வேலை செய்து வருகிறார்கள்..

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**


படிப்பில் தொடர் தோல்விகளை மட்டுமே சந்தித்து வந்த, ஒன்றுக்கும் உதவாத என்னை தேவன் இன்று தம்முடைய அனந்த ஞானத்தினால் நிரப்பி Tech Scientistஆக மாற்றி, கிரகிக்க முடியாத காரியங்களை என்னைக் கொண்டு செய்து வருகிறார். வாலிபர்களாகிய நீங்கள் எந்த கஷ்டமான பாதையில் சென்றாலும், நம்பிக்கையில் உறுதியாக இருங்கள், ஜெபத்தில் தரித்திருங்கள். கண்ணீரோடு விதைப்பவர்கள் கெம்பீரத்துடன் அறுவடை செய்வார்கள். உங்கள் வாழ்க்கையைக் குறித்த தெய்வ திட்டத்தின் மேல் நம்பிக்கை வையுங்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தம் கட்டாயம் நிறைவேறியே தீரும். என்ன அவமானங்கள் நிந்தைகள், போராட்டங்கள் வந்தாலும், கர்த்தரில் நிலைத்திருக்கும்போது கர்த்தர் எல்லாவற்றையும் சம்பூரணமாக செய்து முடிப்பார்.

**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்கள் கூட சகோதரர் காட்வினைப் போல படிக்க விருப்பமில்லாமல், ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற வாஞ்சையோடு இருக்கிறீர்களா? கர்த்தர் கட்டாயம் உங்களுக்கும் வாய்க்க செய்வார். அதற்கு நீங்கள் காத்திருக்க வேண்டும், வாக்குத்தத்ததை விசுவாசித்து ஜெபியுங்கள். நிச்சயம் நீங்களும் உயர்வை அடையலாம்!**

# கவர்ந்த காதல்...

# கசக்கும் கல்யாணம்!

ஆலோசனை: அவி



Heart Beat

**நான் +2 படிக்கிறேன். காதல் செய்வது தவறு என்று எல்லோரும் சொல்கிறீர்கள். Arranged Marriages நிறைய Divorceல் தான் முடிகின்றன. அதற்கு Love Marriage செய்து கொள்ளலாமே. நாங்கள் லவ் பண்ணும் போதே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதனால் Arranged Marriageஐ விட Love Marriage நல்லது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் ஏன் அது தவறு என்று சொல்லி எங்களை பிரிக்கிறீர்கள்? — கார்த்திகா, கிருஷ்ணகிரி.**

அன்பு சகோதரி கார்த்திகா, உங்களுடைய வாதம் கேட்பதற்கு சரி போன்று இருந்தாலும், ஆழமாய் அலசி ஆராய்ந்தால் பல உண்மைகள் உங்களுக்கு புரியும். பல **Arranged Marriages Divorce** ஆவது உண்மைதான். அதே நேரத்தில் அதிகபட்சமான **Love Marriages** முழுவதும் பிரச்சனையிலும், போராட்டத்திலும், தற்கொலையிலும், முடிவடைவதும் நாம் அறிந்த உண்மையே! காரணம், பலருடைய காதல் **6th, 7th** படிக்கின்ற போதே ஆரம்பிக்கின்றது. அந்த வயதில் ஏற்படுகின்ற காதல் அல்லது விருப்பம் நிகழ்கால இன்பத்திற்கு என்றே சொல்லலாம்.

மேலும் **6th, 7th** படிக்கும் மாணவர்களுக்கு, தன் வாழ்க்கைத் துணையை தேர்தெடுப்பதற்கான பக்குவமோ, தேடுவதற்கான பொறுமையோ கிடையாது. அதனால் தான் **Wrong Choice** செய்து விடுகிறார்கள். 60 வருடம் அல்லது 70 வருடம் இணைந்து வாழ வேண்டிய உறவை தேர்ந்தெடுக்கும் பக்குவமும், தெளிவும் இல்லாததால் 3 மாதம் அல்லது அதிகபட்சமாக 9 மாதத்தில் காதல் கசந்து, உறவு உடைந்து, அன்பு தணிந்து, கோபமும், எரிச்சலும், மூர்க்கமும் மிஞ்சும் திருமணமாகத்தான் காணப்படுகிறது.

ஒரு +2 படிக்கும் மாணவனுக்கோ அல்லது +1 படிக்கும் மாணவிக்கோ திருமணத்தை குறித்து என்ன தெரியும். சினிமாவும், ஊடகமும் காண்பிப்பது போல திருமணம் என்பது வெறும் காதல், பாடல், ஊடல் மட்டுமல்ல, அதைத் தாண்டி திருமணம் என்பது இருமனங்கள் ஒன்றிணைந்து,

- ஒருவரின் உணர்வுகளை மற்றொருவர் புரிந்துக் கொள்ளுவது.
- உண்மையான அன்பை வெளிப்படுத்துவது.
- மற்றவரின் கருத்தையும், உணர்வையும் மதிப்பது.
- ஒழுக்கமுடன், பிற பெண்களின் / ஆண்களின் முகம் பாராமல் வாழ்வது.
- உள்ளத்தாலும், உடலாலும் துரோகம் செய்யாமல் இருப்பது.
- புதிய பொறுப்புகளை பொறுமையுடன் செய்வது.



- ஒருவர் சுமையை ஒருவர் சுமப்பது.
- ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுப்பது.
- ஒருவர் குறைவுகளை ஒருவர் சகித்து, உதவி செய்து வாழ்க்கை சக்கரத்தை மெல்ல நகர்த்துவது.

**இப்படி இன்னும் பல பண்புகளும், குணநலன்களும் நிறைந்தது தான் திருமண உறவு.**

## ஆனால் இந்நாட்களில் 'D அல்லது A culture' பரவிவிட்டது.

## D - Divorce [விவாகரத்து] A - Abandonment [கைவிடுதல்]



- நினைத்தது நடக்கவில்லை, so divorce.
- நான் விரும்பியது போல் அவள் / அவன் இல்லை, so divorce.
- நான் சொல்வதை அவள் / அவன் கேட்கவில்லை, so divorce.
- எனக்கு சுயமரியாதை இல்லை, so divorce.
- உன்னை எனக்கு இப்பொழுது பிடிக்கவில்லை, so divorce.
- நான் சம்பாதிக்கிறேன், என் விருப்பப்படிதான் எல்லாம் நடக்க வேண்டும், so divorce.
- உன்னைவிட அவனை / அவளைதான் எனக்கு பிடித்திருக்கிறது. விருப்பப்பட்டால் இரு இல்லை என்றால் வீட்டை விட்டு வெளியே போய் விடு என்பதுதான் இன்றைய திருமணங்களின் நிலை.



### கடந்த 2023ம் ஆண்டு நடந்த ஒரு உண்மைச் சம்பவம்:

ஒரு தங்கை +1 படிக்கும் போது காதல் வயப்பட்டு, அதற்காக படிப்பை நிறுத்தி, பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்து, தற்போது கைக்குழந்தையுடன் கைவிடப்பட்ட நிலையில், உதவிக்காக கையேந்தி நிற்கும் அவலம். காதலித்து திருமணம் செய்துகொண்ட அவளின் ஆசைக்காதலன் வேறொரு பெண்ணை விரும்பி அவளுடன் சென்றுவிட்டான். இப்போது காதலித்தவனும் இல்லை, காதலும் இல்லை, குடும்பமும் ஒதுக்கிவிட்டது, நடுத்தெருவில் பிஞ்சுக் குழந்தையோடு...

படிக்கின்ற வயதில் வாலிபர்களின் முக்கியத்துவம் அழகு, வெளித்தோற்றம், வசதியான வாழ்க்கையுமே என்பதால், திருமணத்திற்குப் பிறகு உள்ளான அழகிற்கும், குடும்ப வாழ்க்கைக்கு தேவையான பொறுமை, பண்பு, அன்பு, விட்டுக் கொடுத்தல், மன்னிப்பு, பெருந்தன்மை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க மறந்து விடுகின்றனர். ஆகவே இப்படிப்பட்ட Divorce சம்பவங்கள் அரங்கேறுகின்றன.

திருமணத்திற்கான வயது வரும் போதுதான் அதைப்பற்றிய சரியான புரிதலும் முதிர்ச்சியும் வரும். எனவே தங்களுக்கென்று நிச்சயிக்கப்பட்டவரை திருமணத்திற்கு பின்னர் புரிந்துக் கொண்டு, திருமணம் என்ற பந்தத்திற்கு தேவையான ஒழுக்கம், கற்பு, நன்னடத்தை, அன்பு, மன்னிக்கும் குணம், விட்டுக்கொடுத்தல் மற்றும் பொறுப்பை உணர்ந்து செயல்படும்போது, எந்த திருமணமும் சீராக இருக்கும்.

படிக்கின்ற பருவத்தில் முழு கவனமும் படிப்பில் இருந்தால் மட்டுமே படிப்பில் வெற்றி பெற முடியும். இல்லையென்றால், எண்ணங்கள் திசைமாறி, வாழ்க்கை தடம் புரண்டு வீதியில் வெறுங்கையாய் நிற்கும் அவலம் ஏற்படும். +2, college, மேற்படிப்பு இவை எல்லாமே படிக்கின்ற வயதுதான். அதில் எந்த கவனக்குறைவும், சிந்தனை சிதறலும் இல்லாமல், முழு கவனத்துடன் படிக்க முயலுங்கள். நீங்கள் படித்து சிறந்த வெற்றியுள்ள வாழ்க்கை வாழும்போதுதான் உங்கள் வாழ்க்கைத் துணை கூட உங்களை மதிப்பார்கள். நீங்கள் சாதிக்கிற தங்கையாக இருக்க வேண்டும். சறுக்கிய மங்கையாக இருக்கக் கூடாது.

அநேக நேரம் நம்முடைய கண்களுக்கும் இருதயத்திற்கும் பிடித்த காரியம், சிறந்த காரியம் அல்ல. வேதம் சொல்கிறது; ''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' (நீதி. 14:12). எனவே உங்களுடைய எண்ணம், செயல், திறன் அனைத்தும் படிப்பில் இருக்கும் போது, அனைத்திலும் வெற்றி நடைபோட வாய்ப்பு உண்டு எனவே சிந்தித்து செயல்படுங்கள்!



முகப்பு செய்தி: சதீஷ்

# தாகம்!

**ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்கு தண்ணீரும் முக்கியம். மனித சரீரத்தில் 60 சதவீதம் தண்ணீரே உள்ளது. இந்த அளவு சரீரத்தில் குறைவுபடும்போது தாகம் ஏற்படுகிறது. சரீரத்தில் உண்டாகும் தாகத்தை எப்படி தண்ணீர் தணிக்கிறதோ, அதுபோலவே ஆத்துமாவில் ஏற்படும் தாகத்தை தணிக்க ஜீவத்தண்ணீராகிய இயேசுவால் மட்டும்தான் முடியும். அதனால் அவர், "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்" (யோவான் 7:37) என்றார். எவன் ஒருவன் ஜீவத்தண்ணீராகிய இயேசுவின் மீது தாகமாய் இருக்கிறானோ அவனுக்குள் ஜீவநதி ஓடும். அவன் போகும் இடமெல்லாம் செழிப்பு உண்டாகும்.**

எலிசாவிற்கு தன் எஜமானாகிய எலியாவிற்குள் இருக்கும் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அளவற்ற தாகம் இருந்தது. எலியாவின் ஊழிய நாட்கள் முடிந்து அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளும் வேளையில், இன்றைக்கு எப்படியாவது தன் எஜமான் மீதுள்ள அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன், எலியா சென்ற எல்லா இடத்திற்கும் எலிசா பின் தொடர்ந்து போக தீர்மானித்தார். இதனை அறிந்த எலியா, எலிசாவை சோதிக்கும்படி அவரைத் தடுத்துப் பார்த்தார். ஆனாலும் எலிசாவோ எலியாவை விடாமல் பின்தொடர்ந்து சென்றார். கடைசியில் இருவரும் யோர்தான் கரையில் நின்றார்கள். **"அவர்கள் அக்கரைப்பட்டபின்பு, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படு முன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான். அதற்கு அவன்: அரிதான காரியத்தைக் கேட்டாய்; உன்னைவிட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது என்றான்" (2 இராஜா. 2:9,10).**



எலியாவும் தீர்க்கதரிசிகளின் புத்திரரும் எத்தனை முறை தடை செய்தும், அபிஷேகத்தின் மீது இருந்த தாகமும், வாஞ்சையும் எலிசாவிற்குள் குறையாது இருந்தபடியால், எலியா சுழல் காற்றில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகையில் பின்தொடர்ந்து சென்று, எலியாவைக் கண்டு அவருக்குள் இருந்த அபிஷேகத்தை இரட்டிப்பாய் பெற்றுக் கொண்டார். தடைகளைக் கண்டு எலிசா சோர்ந்து போகவில்லை, எத்தனை தடைகள் வந்தாலும் சுவிசேஷத்தின் மீது தீராத தாகம் இருந்தபடியால் இவைகளைப் பெற்று தேவனுக்காக வைராக்கியமாக எழும்பினார். நீங்கள்கூட தேவனிடமிருந்து அபிஷேகத்தையும், வரங்களையும் பெற்றுக் கொள்ள, நெடுநாட்கள் காத்திருந்து பெறாமல் இருந்தீர்களானால், சோர்ந்து போகாதிருங்கள். எலிசாவைப் போல தாகத்தோடு கர்த்தரிடத்தில் கேளுங்கள், பெற்றுக் கொள்வீர்கள். 'தாகம் உள்ளவன்

மேல் தண்ணீரை ஊற்றுவேன்' என்று சொன்னவர், சொன்னபடியே உங்கள்மீது அவருடைய ஆவியையும், அபிஷேகத்தையும் ஊற்றி உங்களைப் பயன்படுத்துவார்.

ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த ரெய்ன்ஹார்ட் போன்கேவுக்கு (**Reinhard Bonnke**) ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்ய வேண்டும் என்ற தீராத தாகமும் வாஞ்சையும் இருந்தது. 1967ல் ஆப்பிரிக்காவில் தனது பணியை தொடங்கிய அவருக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புகளும், போராட்டங்களும் வந்தன. இதனால் சோர்ந்துபோன அவருக்கு தேவன் தரிசனத்தில் இரத்தம் தெளிக்கப்பட்ட ஆப்பிரிக்காவைக் காண்பித்து, 'ஆப்பிரிக்கா காப்பாற்றப்படும்' என்ற தம்முடைய குரலை தொனிக்கச் செய்தார். இதற்குபின்பு சூழ்நிலையின் நிமித்தம் தணிந்து போன போங்கேவின் ஆத்தும தாகம் மீண்டும் உயிர்பெற ஆரம்பித்து, ஆப்பிரிக்காவில் தனது பணியை தீவிரப்படுத்த தொடங்கினார். ஆரம்பத்தில் சில 100 பேர் கலந்து கொண்ட இவருடைய கூட்டங்களில், நாட்கள் செல்ல செல்ல இவருடைய ஜெபத்தினாலும் ஆத்தும தாகத்தாலும் பல லட்சக்கணக்கான ஜனங்கள் பங்குபெற்று, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர். இவர் மூலமாக ஆப்பிரிக்க கண்டத்தில் பெரும் அசைவு ஏற்பட்டது. ஏறக்குறைய 83 மில்லியன் மக்களை ஆண்டவர் இவர் மூலமாக சந்தித்தார்.

ஆப்பிரிக்க கண்டத்தில் ஊழியம் செய்ய வேண்டும் என்ற தாகத்தோடு இருந்த ரெய்ன்ஹார்ட் போன்கேவுக்கு ஆண்டவர் தனது ஆவியையும் அபிஷேகத்தையும் அளவில்லாமல் ஊற்றி அவரை பயன்படுத்தினதுபோல, உங்களையும் பயன்படுத்துவார். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். ஆத்துமாக்களைக் குறித்த தாகத்தை எனக்கு தாரும் என்று வாஞ்சையோடு கேளுங்கள், அப்பொழுது ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் வரங்களை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.







அழிந்து போகிற ஆத்துமாக்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற தாகம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்தது. இயேசுவுக்கும் சமாரியா ஸ்திரீக்கும் இடையே நடந்த உரையாடலை தியானிக்கும் போது அவருக்குள் இருந்த ஆத்தும தாகத்தை புரிந்து கொள்ள முடிகிறது. இயேசு சமாரியா ஸ்திரீயின் மனதின் தாகத்தை புரிந்து கொண்டு அவளை நோக்கி, **"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" (யோவான் 4:14).** சமாரியா ஸ்திரீயின் ஆத்தும தாகத்தைத் தணித்த இயேசு, அவள் மூலமாக சமாரியா பட்டணத்திலுள்ள அநேக ஆத்துமாக்களை சந்தித்து அவர்களின் தாகத்தையும் தீர்த்தார்.

எனக்கன்பான வாலிபர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் இருக்கும் அனைத்து ஆத்துமாக்களின் தாகத்தை தணிக்கும் ஜீவத்தண்ணீராக உங்களுக்குள் இருக்கிறார். ''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்'' (யோவான் 7:38). நீங்களும் சமாரியா ஸ்திரீயைப்போல தாகத்தோடு உங்களைச் சுற்றி இருக்கிற ஜனங்களை நோக்கி சென்று, அவர்களின் ஆத்தும தாகத்தை தணிக்கும் பாத்திரங்களாக செயல்பட ஆரம்பியுங்கள். உங்கள் மூலமாக திரளான அறுவடையை இயேசு தருவார்.





# துதியுங்கள்... உயர்த்தப்படுவீர்கள்!


“அப்பொழுது ராஜா கட்டளையிட, அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து, அவனைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்; ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான்” (தானி. 6:16).



செய்தி: மோகன் சி. லாசரஸ்

தானியேல் அந்நிய தேசத்திலிருந்து அடிமையாக பாபிலோன் தேசத்துக்கு கொண்டு வரப்பட்டவர். அடிமையாக இருந்தவரை அரண்மனையில் அதிகாரியாக தேவன் உயர்த்தி வைத்திருந்தார். ‘‘இவன் அந்நிய தேசத்திலிருந்து வந்தவன், நம்முடைய தேசத்தில் வந்து உயர்ந்த பதவியில் வந்து விட்டான், இவனை அழித்துவிட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு தானியேல் மேல் பொறாமை உண்டாயிற்று. தானியேல் மீது ஏதாவது குற்றங் கண்டுபிடித்து, அதில் அவரை சிக்க வைக்க எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் தானியேல் உண்மையுள்ளவராயிருந்தபடியால், அவர்களால் அவரிடம் எந்த குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே 30 நாட்கள் ஜனங்கள் அனைவரும் ராஜாவைத் தவிர வேறு எந்த தெய்வத்தையும் வணங்கவோ, அவைகளை நோக்கி விண்ணப்பம் செய்யவோ கூடாதென்றும், அப்படி செய்தால் சிங்கங்களின் கெபியிலே போடப்பட வேண்டும் என்றும் இராஜாவை தந்திரமாக ஏமாற்றி சட்டம் பிறப்பிக்க செய்தனர்.

தானியேல் அந்தப் புதிய சட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட போதும் தான் தினந்தோறும் செய்துவந்தபடியே



3 வேளையும் முழங்கால்படியிட்டு ஜெபம் செய்து ஸ்தோத்திரம் செலுத்தினார். அவர் ஜெபம் செய்வதைப் பார்த்த இந்த பொறாமைப் பிடித்த அதிகாரிகள், தரியுவிடம் ஓடிப்போய், ‘தானியேல் தன்னுடைய கடவுளிடம் தினமும் மூன்று வேளை ஜெபம் செய்கிறார்’ என்று சொன்னார்கள். தரியு ராஜாவுக்கு தானியேலை மிகவும் பிடிக்கும் என்பதால், அவரைக் காப்பாற்றுவதற்காக சாயங்காலம் வரை முயற்சி செய்தான். ஆனால், ராஜா ஒரு சட்டத்தில் கையெழுத்து போட்டுவிட்டால், அவரால் கூட அதை மாற்ற முடியாது. வேறு வழியில்லாமல், தானியேலைப் பயங்கரமான சிங்கங்கள் இருக்கிற குகைக்குள் போடச் சொல்லி கட்டளையிட்டான்.

அன்று ராத்திரி, தானியேலை நினைத்து தரியுவுக்கு தூக்கமே வரவில்லை. காலையில், அவன் சிங்கக் குகைக்கு ஓடிப்போய், ‘தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா?’ என்று கேட்டான். குகைக்குள் இருந்து ஒரு குரல் கேட்டது. ‘‘ராஜாவே, சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அவை என்னை ஒன்றுமே செய்யவில்லை’’ என்று தானியேல் தரியுவிடம் சொன்னார். தரியுவுக்கு ஒரே



சந்தோஷம்! தானியேலைச் சிங்கக் குகையிலிருந்து தூக்கிவிடும்படி உத்தரவு போட்டான். அவர் உடலில் சின்னக் கீறல் கூட இல்லை. சிங்கங்கள் தானியேலை சேதப்படுத்தவில்லை, அந்த ஆபத்திலிருந்து கர்த்தர் வெளியே கொண்டு வந்து தானியேலை தப்புவித்தார் என்ற சரித்திரம் தானியேல் 6ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப்பகுதியை நாம் வாசிக்கும்பொழுது தானியேல் தேவனை இடைவிடாமல் ஆராதிப்பவர் மற்றும் அவரை எப்போதும் துதித்து ஸ்தோத்தரிப்பவர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது **(தானியேல் 6: 10,20).**

**''கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்''** (சங். 34:1). இதில் 2 காரியங்கள் இருக்கிறது. ஒன்று, கர்த்தரை ஸ்தோத்தரிப்பது, இரண்டாவது, அவரை துதிப்பது. இந்த இரண்டு காரியங்களும் தானியேலுக்கு இருந்தது. கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுவது என்றால் நன்றி சொல்வது. நமக்கு யாராவது நன்மை செய்தால் அவர்களுக்கு நன்றி சொல்வோம். நாம் ஜீவனோடு இருப்பது கர்த்தருடைய கிருபை. கர்த்தர் ஒவ்வொருநாளும் நம் ஜீவனை பாதுகாக்கிறார். நம்முடைய ஜெபத்திற்கு பதில் தருகிறார். இப்படி நன்மைகள் செய்த கர்த்தருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

இரண்டாவது, அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும். துதி என்று சொன்னால் தேவனை புகழ்வது **(Praising in the Lord)**. கர்த்தருடைய பெயர்கள், வல்லமைகள், அற்புதங்களை சொல்லி புகழ்வதுதான் துதி. நீர் நல்லவர், நீர் பெரியவர், நீர் பரிசுத்தர், நீ அற்புதங்களை செய்கிறவர், நீர் அதிசயங்களை செய்கிறவர், நீர் எல்ரோயீ, நீர் எல்ஷடாய், நீர் யோகோவா யீரே என்று அவருடைய பெயர்களை சொல்லி கர்த்தரை புகழுவது. இவை இரண்டும் அவசியம்.

இன்றைக்கு ஆண்டவர் உங்களைப் பார்த்து சொல்கிறார், என் பிள்ளைகளே, என்னுடைய ஜனமே, இடைவிடாமல் நீங்கள் தானியேலைப் போல ஆராதித்தால் நீங்கள் தப்புவிக்கப்படுவீர்கள். நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். நீங்கள் இடைவிடாமல் ஆராதிக்கிறவர்களாக இருக்க வேண்டும். தேவனை துதித்து, ஸ்தோத்தரிக்கிறவர்களாக இருக்க வேண்டும். அப்போது இந்த அற்புதங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நடக்கும் என்று இன்றைக்கு கர்த்தர் உங்களுக்கு சொல்கிறார்.

உலகத்திலேயே முதன்முதலாக மிகப் பிரம்மாண்டமாக எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டு, தேவாலய பிரதிஷ்டைப் பண்ணப்படும் போது, அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏகசத்தமாய்க் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்தரித்துப் பாடினார்கள். அப்படி அவர்கள் ஏகமாய் ஸ்தோத்திரித்துப் பாடினபொழுது தேவனுடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று என்று (2 நாளா. 5:13,14) வசனங்கள் சொல்கிறது. அப்போது, நாம் ஒருமித்து தேவனை துதித்துப் பாடும்போது, தேவனுடைய ஆலயம் தேவனுடைய மகிமையினால் நிரப்பப்படுகிறது.

அன்றைக்கு தேவனை துதித்து பாடினபொழுது, தேவனுடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று. இன்றைக்கு தேவனுடைய ஆலயமாகிய நாம் தேவனுடைய மகிமையினால் நிரப்பப்பட வேண்டுமானால், நாம் அவரை துதித்துப் பாட வேண்டும். அப்பொழுது நாம் கர்த்தருடைய மகிமையால் நிரப்பப்பட்டு அநேகருக்கு ஆசீர்வாதமுள்ள பாத்திரங்களாய் இருப்போம். நம்மைக் காண்கிற யாவரும் கர்த்தருடைய மகிமையை உணர முடியும்.



**அன்பான வாலிபர்களே! தானியேலைப்போல எக்காலத்திலும் ஸ்தோத்தரிக்கும் வாலிபர்களாகிய உங்களைத் தான் தேவன் எதிர்பார்த்து காத்திருக்கிறார். சிங்க கெபிக்குள் போட்டாலும் துதியுங்கள்! நீங்கள் ஆராதிக்கும் தேவன் உங்களை விடுவிக்க வல்லவராக இருக்கிறார்.**

சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி-6



**Hello friends,** எல்லாரும் எப்படி இருக்கீங்க? வீரமுள்ள தீமோத்தேயு என்னும் இத்தொடர் மூலம் உங்களை சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. ஒவ்வொரு மாதமும் இத்தொடர் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது என்று விசுவாசிக்கிறேன்.

நாம் கடந்த மாதம் தீமோத்தேயுவுக்கு கொடுக்கப்பட்ட முதல் பொறுப்பையும், அவர் எவ்வாறு உண்மையாய் இருந்து அதை செய்து முடித்தார் என்பதையும் பார்த்தோம்.

**இந்த மாதம் என்ன பார்க்க போகிறோம்?** Any guess? **சரி, வாங்க தொடருக்குள் போவோம்.**

பவுல் தனது மூன்றாவது ஊழிய பயணத்தின் போது எபேசு பட்டணத்தில் தங்கியிருந்த பொழுது கொரிந்து சபையில் காணப்படுகிற பிரச்சினைகளை குறித்து கேள்விப்பட்டார். ரோம சாம்ராஜ்யத்தில் ரோம் மற்றும் அலெக்ஸாண்ட்ரியா பட்டணங்களுக்கு பிறகு கொரிந்து பட்டணம் மூன்றாவது பெரிய நகரமாக இருந்தது. அங்கு காம தேவதையின் கோயில் இருந்தபடியால் நகரில் தேவதாசிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது. கொரிந்து நகரத்தில் மட்டுமின்றி கொரிந்து சபையில் கூட ஒழுக்கக்கேடுகள் நிலவின. சபை வாக்குவாதங்களால் பிளவுபட்டிருந்தது. ஒருவர் மேல் ஒருவர் அரசு நீதிமன்றங்களில் வழக்கும் தொடர்ந்திருந்தன. பவுலின் பிரசங்கத்தை கூட எதிர்க்கும் நிலை அங்கு காணப்பட்டது. விசுவாசிகள் ஆவிக்குரிய வளர்ச்சியில் குறைவுபட ஆரம்பித்தனர். விக்கிரகங்களுக்கு படைத்த உணவை உண்ணுதல், உலக காரியத்தின் மீது மோகம் கொள்ளுதல், விபச்சாரம், வேசித்தனம் போன்ற பாவ காரியங்கள் அங்கு காணப்பட்டன.

இவைகளை தீர்ப்பதற்காக பவுல் தீமோத்தேயுவை அங்கு அனுப்பினார். (இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன். நான் எங்கும் எந்தச் சபையிலும்

## Major Problems in the Church at Corinth

- Division in the church
- A party spirit, exalting preachers
- Enamored by the wisdom of the world
- Carnality among the members
- Lack of growth
- Sexual immorality
- Lack of church discipline
- Tolerating sin in the church
- Going to law against a brother
- Marriage problems
- Confusion over marriage and divorce issues
- Eating meats offered to idols
- Sinning against weaker brethren
- Putting a stumbling block before brethren
- Lusting after evils things
- Murmuring against God
- The woman's covering and being holy
- Perversion of the Lord's Supper
- Irregularities and disorder in public worship
- Improper role of women in the church
- Contention over and abuses of spiritual gifts
- Creating confusion in the church
- Mistaken view of the resurrection
- Misunderstanding about the collection

*There are some things that have not changed in the church!*

போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான் **(I கொரிந்தியர் 4:17).** கொரிந்து சபையிலிருந்த ஒருசிலர் பவுலுடைய போதகத்தையும் எதிர்த்தனர்.

சிறுவயதிலிருந்து பக்தியில் வளர்க்கப்பட்டிருந்த தீமோத்தேயுவிற்கு கொரிந்து சபையின் இழிவான நிலை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். வாலிபனாகிய தீமோத்தேயுவிற்கு இது ஒரு சவாலான காரியமே! ஏனெனில் தன்னைவிட வயதில் பெரியவர்களையும், அந்த சபையின் மூப்பர்களையும் சந்தித்து, பவுல் தன்னிடம் சொன்ன வார்த்தைகளை கூற வேண்டியது இருக்கும். ஒருபக்கம் தீமோத்தேயு கூறுவதை ஏற்றுக்கொள்ளும் கூட்டம் இருந்தாலும், மறுபக்கம் இவன் சிறு பையன் தானே இவன் சொல்லி நாம் கேட்க வேண்டுமா? என்று ஏளனம் செய்கிற, விமர்சிக்கிற கூட்டம் இருந்திருக்கும்.

தீமோத்தேயு இயல்பிலேயே பயந்த சுபாவம் கொண்டவர் என்பதால் பவுல் கொரிந்து சபையினருக்கு 1 கொரிந்தியர் 16:10ல் (தீமோத்தேயு உங்களிடத்திற்கு வந்தானேயாகில், அவன் உங்களிடத்தில்



பயமில்லாமலிருக்கப் பாருங்கள். என்னைப்போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே) என்று எழுதுகிறார்.

பவுல் தன்னிடம் கூறியபடியே தீமோத்தேயு கொரிந்து சபைக்கு சென்று தனக்கு கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றினார். ஆனால் அங்கு ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு தாங்கள் செய்யும் அக்கிரமங்களை நியாயப்படுத்தும் சுயநீதிக்காரர்களாக இருந்ததால், தீமோத்தேயு அவர்களின் நிலை கண்டு சோர்வுக்குள்ளானார். அவரால் நினைத்த அளவிற்கு பெரிய மாற்றத்தை அங்கு ஏற்படுத்த முடியவில்லை. எனவே சோர்வுற்று, ஒரு தோல்வி மனப்பான்மையுடன் பவுலிடம் திரும்பினார். ஆனாலும் தோல்வி அடைந்து வந்த தீமோத்தேயுவை பவுல் விட்டுவிடவில்லை, அவரை உற்சாகமூட்டி அவருடன் ஏரஸ்துவையும் சேர்த்து பவுல் மக்கெதோனியாவிற்கு அனுப்பினார்.

சபை கண்காணிப்பு பணிகளையே செய்து வந்த தீமோத்தேயுவிற்கு முதல்முறையாக வெளியிடங்களில் நற்செய்தி சொல்லும் வாய்ப்பு கிடைத்தது. இதுவரை தீமோத்தேயு தனது குழுவினருடன் சேர்ந்து தான் நற்செய்தி சொல்ல சென்றிருக்கிறார். ஆனால் இதுவோ அவருக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்திருக்ககூடும். ஒருசில நாட்களுக்குப் பிறகு பவுலும் அவர்களுடன் மக்கெதோனியாவில் சேர்ந்து கொண்டு தன்னுடைய துணை ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்.

கொரிந்து சபை பிரச்சனையில் சோர்வுற்று தோல்வி மனப்பான்மையுடன் வந்த தீமோத்தேயுவை உற்சாகப்படுத்தும் விதமாக கொரிந்து சபைக்கு பவுல் எழுதிய இரண்டாம் நிருபத்தில் தன் பெயரோடு தீமோத்தேயுவின் பெயரையும் சேர்த்துக் கொண்டார். சோர்வடைந்த துணை ஊழியர்களை அனைத்து அப்போஸ்தலர்களும் உற்சாகப்படுத்தியதால் தான், துணை ஊழியர்கள் பெரிய ஊழியர்களாக பெலப்பட்டு சபையை வளர்க்க முடிந்தது.

**தீமோத்தேயு தனக்கு கொடுக்கப்பட்ட முதல் பொறுப்பை கச்சிதமாக செய்து முடித்ததால்தான் அவருக்கு மற்றொரு பொறுப்பும் கொடுக்கப்பட்டது. ஆனால் அது சவால் நிறைந்ததாக இருந்தது. அதுபோல தான் நாம் ஆண்டவர் நமக்கு கொடுக்கும் காரியங்களில் உண்மையாக இருக்கும்பொழுது, நம்மை நம்பி அடுத்தடுத்த பணிகளை ஆண்டவர் நமக்குக் கொடுப்பார். அது முந்தினதை விட ஒரு படி மேலாகவே இருக்கும். ஆகவே அது சவால் நிறைந்ததாக இருந்தாலும் நம்மை சோர்வுற செய்வதற்கு அல்லவே. அந்த சவால்களும் சோதனைகளும் நம்மை பெலப்படுத்துவதற்காகவே. நீங்கள் அப்படி ஒரு சவாலை சந்தித்துக் கொண்டிருந்தால், தேவன் உங்களை அடுத்த கட்டத்திற்கு பயிற்றுவிக்கிறார் என்று சந்தோஷமடையுங்கள். ஆவிக்குரிய வாழ்வில் நீங்கள் வளருகிறதற்கு அது தான் ஒரு அடையாளம்.**

மீண்டும் அடுத்த தொடரில் உங்களை சந்திக்கிறேன்.

**- வீர சகாப்தம் தொடரும்...**

அலசல்: கெத்சி கிளார்வின்




# கவலை



வாலிபர்களாகிய நாம் இன்று மிகவும் போட்டி நிறைந்த உலகில் (Competitive World) வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு நாட்களும் பல சவால்கள் நிறைந்தது உண்மைதான். அச்சவால்களுக்கேற்ப நாம் நம் உணர்ச்சிகளை பல்வேறு விதங்களில் வெளிப்படுத்துகிறோம். அதிலும் குறிப்பாக, பயம் - தனிமை - கோபம் - வெறுப்பு - மன அழுத்தம் போன்ற பல எதிர்மறையான உணர்வுகளை அனுபவிப்பவராய் நீங்கள் இருந்தால் இந்த பகுதி உங்களுக்கே!

**வயது முதிர்ந்தவர்கள் தான் அதிகம் கவலைப்படுவார்கள் என்ற காலம் போய் இன்று சிறு பிள்ளைகளும், வாலிபர்களும் அதிகம் கவலைப்படுகிறவர்களாய் மாறியுள்ளனர்.**



தங்கள் உடல் அழகைக் குறித்த கவலை,



முடி கொட்டுவதால் ஏற்படும் கவலை



திருமண வயதைத் தாண்டும் போது கவலை




தன் படிப்பிற்கு தகுந்த வேலை கிடைக்குமா என்கிற கவலை



குடும்பப் பின்னணி மற்றும் பொருளாதாரம் குறித்த கவலை...

என இப்படி பல காரியங்களைக் குறித்து கவலைப்படும் வாலிபர்களில் ஒருவரா நீங்கள்?

அன்பான வாலிபரே! வானில் பறந்துக் கொண்டிருக்கும் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள். நம்மைப் போலவே அவைகளுக்கும் அன்றாட உணவு, வசிக்கக் கூடு என பல தேவைகள் இருப்பினும், ஏதாவது ஒரு பறவை, ''நான் ஏன் பிறந்தேன்'' என்ற எண்ணத்தில் கவலையோடு அமர்ந்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பறவைகளே இப்படி எதைக் குறித்தும் கவலைப்படாமல் சந்தோஷமாக இருக்கும்போது, தேவ சாயலில் படைக்கப்பட்ட உங்கள் நிலை என்ன?

## அதிகமாக கவலைப்படுவதினால் உண்டாகும் பாதிப்புகள்

- மனஅமைதியைக் கெடுத்து, பதட்டத்தை ஏற்படுத்தும்.
- பசியின்மை மற்றும் தூக்கமின்மையை ஏற்படுத்தும்.
- தலைவலி, வயிற்றுவலி நெஞ்சுவலி போன்ற உடல்நலக் குறைபாடுகள் ஏற்படும்.
- வேலை மற்றும் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போகும்.
- காரணமில்லாமல் எரிச்சலைத் தூண்டுவதோடு, மன அழுத்த ஹார்மோனான கார்டிசாலின் அளவை உயர்த்தும்.
- அதிகமாக உண்ணுதல், மது அருந்துதல் அல்லது போதைப்பொருள் உட்கொள்ளுதல் போன்ற ஆரோக்கியமற்ற நடத்தைகளுக்கு வழிவகுக்கும்.



## அநேகர் இந்த கவலை என்ற வலையில் சிக்குவதற்கு அடிப்படை காரணங்கள்:

**• தான் நினைத்த காரியம் நடக்காத போது,**

**• நினைத்த காரியம் நினைத்த நேரத்திற்குள் நடக்காத போது**

இயேசு வாழ்ந்த காலத்தில், மார்த்தாள், மரியாள் என்ற இரண்டு சகோதரிகளைக் குறித்து நீங்கள் அறிந்திருக்கக்கூடும். (லூக்கா 10:38-41) இச்சம்பவத்தில், விருந்தாளியாய் தன் வீட்டிற்கு வந்த இயேசுவை கவனிப்பதில் மார்த்தாள் முழுவீச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

ஆனால், மரியாளோ இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்துக் கொண்டு அவர் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தனக்கு உதவ மரியாள் வரவில்லை என்பதினால் தனது கவலையை இயேசுவிடம் வெளிப்படுத்திய மார்த்தாளைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மார்த்தாளின் கவலை உங்களுக்கு நியாயம் போல தெரிகிறதோ! இச்சம்பவத்தை நீங்கள் சற்று உற்று நோக்கினால், மார்த்தாளோ இயேசுவுக்கென்றுதான் வேலை (ஊழியம்) செய்கிறாள். ஆனால் மரியாளோ 'இது எனக்கும் இயேசுவுக்குமான நேரம்' என்பதில் தெளிவு பெற்றவளாய் உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள். அதைத் தான் இயேசுவும் கூட ''மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துக்கொண்டாள்'' என்று குறிப்பிடுகிறார்.

## கவலையை மேற்கொள்ள வேதம் கூறும் எளிய தீர்வுகள்:

- எதை குறித்தும் அதிகம் யோசிக்காதீர்கள்; குறிப்பாக முறுமுறுக்காதீர்கள் (குழப்பம் நீங்கும்).
- முதலில் உங்களைக் கவலைக்குள்ளாக்கும் காரியங்களை கர்த்தரிடம் தெரியப்படுத்தி அதற்காக ஸ்தோத்திரம் செலுத்துங்கள் (தேவசமாதானம் உங்கள் இருதயத்தை நிரப்பும்).
- ஸ்தோத்திரம் செய்த பின், அந்த காரியத்தைக் குறித்து கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணிவிட்டு, அவருடைய பர்வதத்தில் எல்லாம் பார்த்துக் கொள்ளப்படும் என்பதை முழுமையாய் விசுவாசியுங்கள் (இருதயத்தின் பாரம் நீங்கும்).

**"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி. 4:6).**



இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாலிபரே! நாம் வாழும் இந்த தற்காலிக உலகில் நாம் தினந்தோறும் எதிர்கொள்ளும் போராட்டங்களும், பிரச்சனைகளும் நமக்கு பல வேளைகளில் கவலையைக் கொண்டு வருவது உண்மைதான். ஆனால் நாம் அக்கவலைகளில் மூழ்கி மடிந்து விடாமல் இருக்க கர்த்தருடனான உறவு மிகவும் அவசியம். **"உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்" (சங் 34:18)** என்பதாக தாவீது ராஜா கூறுகிறார். நாம் கர்த்தருடைய வார்த்தையை உட்கொள்ள உட்கொள்ள அது மலையைப் போல இருக்கும் நம்முடைய லௌகீகக் கவலைகளை பனியைப்போல உருகிப்போகப்பண்ணி, நமக்கு மனமகிழ்ச்சியையும், சமாதானத்தையும் தரும். நினைவில் கொள்ளுங்கள்! தாவீது ராஜாவைப்போல் கர்த்தருடைய வார்த்தையை வாசிப்பதையும், அவரிடத்தில் எல்லாவற்றையும் ஸ்திரோத்திரத்தோடே தெரியப்படுத்துவதையும் வழக்கமாக்கிக் கொண்டால் துக்கமோ, வருத்தமோ கவலையோ உங்களை மேற்கொள்ள முடியாது.



# எழுப்புதலைப் பற்ற வைப்போர் புத்துணர்ச்சி முகாம்

Revival IGNITERS Refresh Camp



கடந்த 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 14,15,16 மற்றும் 25,25,26 தேதிகளில் இரண்டு பிரிவுகளாகவும், 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 21,22,23 ஆகிய தேதிகளிலும், 2024ம் ஆண்டு மே மாதம் 3,4,5 ஆகிய தேதிகளில் என 4 பிரிவுகளாக தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள வாலிபர்களுக்கென்று எழுப்புதலைப் பற்ற வைப்போர் முகாம் நடத்தப்பட்டதில் 6257 வாலிபர்கள் கலந்து கொண்டார்கள். இதில் “7 விதமான தலைமுறையை எழுப்பி பயன்படுத்துவேன்” என்று வாக்கு கொடுத்த தேவன், தாம் வாக்குரைத்தபடியே 7 விதமான தலைமுறையை எழுப்பி பயன்படுத்தி வருகிறார். 4 விதமான அபிஷேகத்தை (ஜெப அபிஷேகம், யுத்த அபிஷேகம், தீர்க்கதரிசன அபிஷேகம், சுவிசேஷ அபிஷேகம்) கொடுத்து பயன்படுத்துவேன் என்று







கொடுத்த வாக்குத்தத்தத்தின் படி 4 விதமான அபிஷேகத்தையும் அளவில்லாமல் ஊற்றி வாலிபர்களை எழுப்புதலுக்காக பயன்படுத்தி வருகிறார்.

4 பிரிவுகளாக நடைபெற்ற இம்முகாம்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மணிகளை தருவேன் என்று ஆண்டவர் வாக்கு கொடுத்தார். அதன்படி அழைப்புக்கொடுத்து கடந்த மே மாதம் 30,31 தேதிகளில் எழுப்புதல் பற்ற வைப்போர் புத்துணர்ச்சி முகாம் 2 நாட்கள் நடைபெற்றதில், சுமார் 1087 மணிகளை கொண்டுவந்து மறுபடியும் புதுப்பித்தார். தேவனால் அழைத்து வரப்பட்டவர்கள் எழுப்புதலில் பயன்பட புது அபிஷேகம், புது வல்லமையைப் பெற்று உற்சாகத்துடன் கடந்து சென்றனர். இதில் சகோ. மோகன் சி. லாசரஸ் மற்றும் சகோ. சாம் ஜெபராஜ் அவர்கள் உற்சாகமூட்டும் செய்திகளைக் கொடுத்து வாலிபர்களை பெலப்படுத்தி இன்னும் வல்லமையாய் ஊழியம் செய்ய ஜெபித்து அனுப்பினர். கர்த்தர் Igniters மூலம் அநேக அற்புத அடையாளங்களையும் செய்து வருகிறார்.







சாதனை: சுமா

solethreads



# காலடி தடம்!



*இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். வாழ்க்கைப் பயணம் என்பது சுவாரஸ்யமானது. சில நாட்கள் நாம் நினைத்தது நடக்கும், சில நாட்கள் ஏமாற்றமாய் முடியும். ஆனால் நாம் உலகில் வாழும் ஒவ்வொரு நிமிடமும் நமக்காகத் தான் ஓடிக் கொண்டிருக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். சுவாரஸ்யமான வாழ்வில் வரும் தடைகளை துணிவுடன் எதிர்கொள்பவர்கள் தான் சாதனையாளர்கள். இன்று நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் முன்.*

டெல்லியை சேர்ந்த கவுரவ் சோப்ரா என்பவர் பிரபலமான காலணி ப்ராண்டுகளான பாட்டா, ஹஷ் பப்பிஸ், பூமா, பென்னெட்டன் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து காலணி வடிவமைப்பாளராக பணியாற்றி வந்தார். வாடிக்கையாளர்கள் திறந்த காலணி வடிவத்தை (flip-flops) விரும்பியதை அறிந்த இவர், அதை தாயாரிப்பதில் அதிக நாட்டம் கொண்டார். ஆனால் இந்த காலணி பிராண்டுகள் புதுமையான வடிவத்தை உருவாக்குவதில் அதிக கவனத்தையும் நேரத்தையும் செலவிடவில்லை என்பதனை அறிந்த கௌரவ், நுகர்வோர் பிராண்ட் நிபுணர்களான சுமந்த் ககாரியா, விக்ரம் ஐயர் மற்றும் அப்ரஜித் கதுரியா ஆகியோருடன் இணைந்து, 2018 நவம்பரில் பிராண்டட் flip-flopகளுக்கான தேவையை பூர்த்தி செய்ய **Sole threads** என்ற நிறுவனத்தைத் தொடங்கினார்.



இந்தியாவில் flip-flops பிரபலமாக இருந்த போதிலும், அத்தகைய திறந்த காலணிகளுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையில் தனக்கென ஒரு நிரந்தர சிறப்பான இடத்தை பிடிக்க நினைத்தார். இளைஞர்களை




மையமாக கொண்டு புதுப் புது வடிவங்களை உருவாக்க வேண்டும் என்பதே இந்த பிராண்டின் நோக்கமாக அமைந்தது.

குறைந்த முதலீட்டில் அற்பமாக துவங்கப்பட்ட இந்த நிறுவனம், டிசம்பர் 2019 இல் முக்கிய மின்வணிக தளங்களில் தொடங்கப்பட்டு மிகப்பெரிய வரவேற்பையும் நுகர்வோர் இணைப்பையும் கண்டது.

**Solethreads** அறிமுகப்படுத்தப்பட்ட நான்கே மாதங்களில் அமேசானில் ரூ. 50 லட்சம் **GMV**யை தாண்டியது, மேலும் வளர்ந்து வரும் பிராண்டாக மின்வணிக தளத்தால் அங்கீகரிக்கப்பட்டது. ''ஒட்டுமொத்தமாக, அறிமுகப்படுத்தப்பட்ட ஏழு மாதங்களில் ரூ.1 கோடி வருவாயை ஈட்டியது.

**Solethreads** இந்தியாவில் மட்டுமே தயாரிக்கப்படுகின்றது. ஏதோ ஒரு காலணி வகை என்று தயாரிக்காமல் ஒவ்வொன்றையும் நேர்த்தியாக கிராஃபிக் டிசைன், பிவிசி ஸ்ட்ராப் **(Graphic Design, PVC Strap)** போன்ற பல நுட்பங்களை பயன்படுத்தி தயாரித்து வருகிறது. தற்போது **Solethreads, Amazon, Flipkart** மற்றும் **Myntra** போன்ற மின்வணிக தளங்களுடன் இணைந்தும் மற்றும் அதன் சொந்த வலைத்தளத்திலும் விற்பனை செய்து வருகிறது.

கௌரவ் வாழ்க்கை பயணத்தை படிக்கும் போது எளிமையாக சாதித்து விட்டது போல தெரியலாம். ஆனால் ஒரு புதிய பிராண்ட் தயாரித்தாலும் அது மக்களை கவர வேண்டுமானால் அதிக உழைப்பும் மனஉறுதியும் தேவை; அப்படி இருந்தால் தான் சாதிக்க முடியும். குறுகிய காலத்தில் நண்பர்களாக இணைந்து தங்களுடைய கடின உழைப்பாலும், திறமையாலும், சரியான நேரத்தில் வாடிக்கையாளர்களின் தேவையை சரியாக புரிந்து கொண்டு புதிய வழியில் செயல்பட்டதால் இன்று சாதனையாளர்களாக மாறியுள்ளனர்.



*இதை வாசிக்கும் நண்பர்களே, சுவாரஸ்யம் நிறைந்த வாழ்க்கையை நீங்கள் தான் வாழ வேண்டும். சுவாரஸ்ய வாழ்க்கையை ரசிக்க தயாராக இருங்கள். நீங்கள் சாதித்துச் சென்ற காலடி தடத்தில் அநேகரை பயணிக்கச் செய்யுங்கள்!*

காரைக்குடியில்...

எழுப்புதல் முழு இரவு ஜெபம்

நாள் : ஜூலை 19 (வெள்ளிக்கிழமை)
நேரம் : இரவு 9 மணி முதல்
அதிகாலை 4 மணி வரை

இடம்: தெய்வீக
மகிமையின் ஆலயம்
கோட்டையூர்,

செய்தியும் ஜெபமும் : சகோ. சதீஷ் குமார்

தொடர்புக்கு : 97509 55548 / 99522 52674





தகவல்: காட்வின்

# TECH - 6 கைபேசியைக் கையாளு!

**அன்பார்ந்த வாலிபர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதத்தில் Cloud Storage குறித்தும் அதன் மூலம் செயல்படும் Google Docs, Google Sheets ஆகிய செயலிகள் குறித்தும் தெரிந்து கொண்டோம். இந்த முறை Cloud Storage மூலம் பயன்படுத்தக்கூடிய Google photos குறித்து அறிந்து கொள்ளலாம்.**

பொதுவாக இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரம் இல்லை என்று சொன்னாலும் நினைவுகள் மாத்திரம் நிரந்தரம் என்று சொல்வார்கள். தற்காலத்தில் புகைப்படங்கள் நம் நினைவுகளை திரும்ப கொண்டு வரும் காரணிகளில் முக்கிய பங்காற்றுகின்றன. மொபைல் போன் கண்டு பிடிக்கப்படும் காலங்களுக்கு முன் புகைப்படங்கள் அட்டைகளாக மட்டுமே இருந்தன; அதை ஆல்பம் போட்டு பாதுகாத்து வைப்பார்கள். கைபேசியில் புகைப்படம் எடுக்கும் வசதிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அனைவரும் கைபேசியில் புகைப்படம் எடுக்கத் துவங்கினர். அந்த கைபேசி திடீரென பழுதாகும் போது அனைத்து தகவல்களும் புகைப்படங்களும் தொலைந்து போகும் சூழல் ஏற்படும். முக்கியமான சில புகைப்படங்கள் தொலைந்தால் அதிக வருத்தம் உண்டாகும். இதைபோன்ற சூழ்நிலைக்கு உதவியாக தான் Cloud storage நமக்கு உள்ளது.

புகைப்படங்களை Cloud storage மூலம் சேமித்து வைக்க Drop Box, Microsoft one drive, icloud, Google photos போன்ற பல இணையதளங்கள் உள்ளன. பெரும்பாலும் எல்லா Cloud storage இணையதளங்களும் குறிப்பிட்ட அளவு பணம் கட்டி பயன்படுத்துவதாகவே இருக்கும். இந்த மாதம் நாம் Google photos குறித்து பார்க்கலாம்.




**கூகுள் போட்டோஸ்:** கூகுள் நிறுவனத்தின் இலவச கிளவுட் புகைப்பட சேமிப்பகம் ஆகும்.

* 16 பிக்ஸல் வரை உள்ள புகைப்படங்கள், 1080mp காணொளிகளுக்கு வரம்பற்ற சேமிப்பு உள்ளது. (எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு store பண்ணிக் கொள்ளலாம்)

* புகைப்படங்கள் அசல் தரத்தில் பதிவேற்ற விரும்பினால், 15 ஜிபி வரை பயன்படுத்திக் கொள்ளலாம்.

* ஆண்ட்ராய்டு, IOS இயங்குதள மொபைல்களில் உபயோகிக்கலாம். இணைய உலவியில் கூட https://www.google.com/photos என்ற தளத்தில் பயன்படுத்தலாம் .

* Google photos ஆனது Machine Learning தொழில்நுட்பம் கொண்டதால், புகைப்படங்களை எளிதில் ஒருங்கமைக்கலாம். எடுத்துக்காட்டாக ''கார்'' என

தேடினால் நீங்கள் இதுவரை எடுத்த கார்களின் புகைப்படங்களை மட்டும் இது பிரித்து காண்பிக்கும். இடத்தின் பெயரை search செய்தால் அந்த இடத்தில் நீங்கள் எடுத்த அனைத்துப் புகைப்படங்களையும் காண்பிக்கும்.

* முகங்களின் அடிப்படையில் பெயர்களை பதிவு செய்து வைத்தால், இதுவரை நீங்கள் upload செய்த எல்லா புகைப்படங்களில் இருந்தும் குறிப்பிட்ட நபரை Filter செய்து கண்டுபிடிக்கலாம்.

* எடுத்த புகைப்படங்களை எளிதாக பரிமாறிக் கொள்ளலாம் (download செய்யாமலே). இவ்வாறு Google photos மூலம் நாம் நம்முடைய நினைவுகள் எளிதில் அழியாமல், குறிப்பிட்ட இடத்தில் தேங்காமல், எங்கும் எந்த நேரத்திலும் பயன்படுத்தக் கூடியதாய் உதவி செய்கிறது.

**அன்பான வாலிபரே! தேவன் தந்த ஞானத்தைக் கொண்டு மனிதனால் இவ்வளவு நேர்த்தியான தொழில்நுட்பத்தை உருவாக்கி நம்முடைய காரியங்களை சேமித்து, நினைவில் வைத்து, அழியாமல் பாதுகாக்க முடியுமானால், நம்மைப் படைத்த தேவன் நம்மை தம்முடைய நினைவில்**



**வைத்து பாதுகாத்து பராமரிப்பது எத்தனை நிச்சயம். வேதம் சொல்லுகிறது, "இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது." உன்னதமான தேவனுடைய உள்ளங்கைகளில் நீங்கள் பொறிக்கப்பட்டு, எப்போதும் அவர் நினைவில் உள்ளீர்கள். யாராலும் உங்களை அவரிடத்திலிருந்து பறிக்கவோ, அவர் நினைவில் இருந்து உங்களை அழிக்கவோ முடியாது!**

**மீண்டும் அடுத்த மாதம் மற்றுமொரு tech update உடன் உங்களை சந்திக்கிறேன். Bye!**

# நெல்லிக்காய்



- ஒரு நெல்லிக்காய் மூன்று ஆப்பிள்களுக்குச் சமம். நெல்லிக்காயில் கால்சியம், வைட்டமின் - சி, புரதம் போன்ற சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன.
- நெல்லிக்காய் உடலின் வெப்பத்தை குறைத்து குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது.
- நெல்லிக்காயில் அதிகளவு வைட்டமின் - சி நிறைந்துள்ளது. இது நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்கிறது.

கோடை காலத்தில் நெல்லிக்காய் சாப்பிடுவதன் மூலம் பருவகால தொற்றுகளில் இருந்து தப்பலாம்.

- நெல்லிக்காய் சாப்பிட்டால் செரிமானம் மேம்படுகிறது. மேலும், இரைப்பை குடல் ஆரோக்கியம் பெறுகிறது.
- நெல்லிக்காயில் ஆண்டி ஆக்ஸிடெண்ட் நிறைந்துள்ளது. இது உடலில் உள்ள செல்கள் பாதிக்கப்படுவதை தடுக்கிறது. மேலும் நாள்பட்ட நோய்கள் தாக்குவதை தடுக்கிறது.
- நெல்லிக்காயில் உள்ள வைட்டமின் - சி நமது உடலில் கொலஜன் உற்பத்தியை அதிகரித்து, சருமத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. அதனுடன் இளமையான தோற்றத்தையும் தருகிறது.

குறிப்பு: ஏதாவது உடல்நலப் பிரச்னைகள் இருந்து, அதற்கு மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொண்டு இருந்தால், மருத்துவரையின் அறிவுரைக்குப் பிறகே நெல்லிக்காயை உணவில் சேர்க்க வேண்டும்

# ஜெபக்கையேடு

ஜெபம்: பெனிட்டா

## கல்வித்துறை

இந்தியாவில் 33 கோடி மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். 14.8 லட்சம் பள்ளிக் கூடங்களும், 43,796 கல்லூரிகளும், 1,133 பல்கலைக் கழகங்களும், 95.07 லட்சம் ஆசிரியர்களும், 15.15 லட்சம் பேராசிரியர்களும் உள்ளனர். இந்திய தேசத்தில் சுமார் 25 கோடி பேர் சீரான கல்வி தகுதி இல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வருடமும் 65 லட்சம் பட்டதாரிகள் தேர்ச்சி பெறுகிறார்கள். தற்போது திரு. தர்மேந்திர பிரதான் கல்வித்துறை அமைச்சராக இருக்கிறார்.

### ஜெபக்குறிப்புகள்

- பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களை தேவன் பாதுகாத்து கொள்ளவும், நல்ல ஞானத்தைக் கொடுக்கவும் ஜெபியுங்கள்.
- நம் தேசத்திலுள்ள மாணவர்கள் மத்தியில் கல்வியைக் குறித்த விழிப்புணர்வு உண்டாக ஜெபியுங்கள்.
- ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு நல்ல ஞானம் உண்டாகவும், அவர்களுக்கு நல்ல போதிக்கும் திறன்களை கர்த்தர் கொடுக்கவும் ஜெபியுங்கள்.
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஏற்படும் விபத்துகள் தடுக்கப்படவும், அவர்கள் மீது தேவ ஆளுகை உண்டாகவும் ஜெபியுங்கள்.



## சிறார் குற்றங்கள்

NCRB அறிக்கையின்படி ஒவ்வொரு ஆண்டும் சிறார் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. குற்றத்தில் ஈடுபடுபவர்களில் 76% பேர், 16 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள், பாலியல் சம்பந்தமான POCSO வழக்குகளில் 1,885 சிறார்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### ஜெபக்குறிப்புகள்

- இந்தியாவில் அதிகரித்து வரும் சிறார் குற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.
- கைது செய்யப்பட்ட சிறார்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படவும் அவர்கள் விடுவிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- சிறார்களை குற்ற செயல்களில் ஈடுபட வைக்கிற ரவுடி கும்பல்கள் மனம்திரும்பவும், அவர்களுக்கு பின்பதாக இருந்து கிரியை செய்யும் பொல்லாத ஆவியின் கிரியைகள் அழிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- இந்தியாவில் உள்ள அனைத்து சிறார்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.





# மது பழக்கம்

இந்தியாவில் சுமார் 16 கோடிக்கும் அதிகமான பேர் மது அருந்தும் பழக்கம் உடையவர்களாக இருக்கின்றனர். இவர்களில் 7.5 சதவீதம் பேர் பெண்கள் ஆவர். நாட்டிலேயே மதுபான பிரியர்கள் அதிகம் உள்ள மாநிலங்களில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா முன்னிலை வகிக்கின்றன. அருணாச்சல பிரதேசத்தில் அதிக பெண்கள் மது அருந்துவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 15 வயதுக்கு மேற்பட்ட 24% பெண்கள் மது அருந்துகிறார்கள். நாட்டில் 1.50 கோடி பெண்கள் மது போதைக்கு அடிமையாக உள்ளனர்.

## ஜெபக்குறிப்புகள்

- மதுபழக்கத்தில் அடிமைப்பட்டிருக்கும் சுமார் 16 கோடிக்கும் அதிகமான மக்கள் இப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.
- மதுபழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் பள்ளிக் கல்லூரிக்கு செல்லும் மாணவ மாணவிகளை தேவன் விடுவிக்க ஜெபியுங்கள்.
- இவர்கள் குழந்தை பருவத்திலேயே போதைக்கு அடிமையாகி, படிப்பை இழந்து எதிர்காலம் பாதிக்கப்படாமல் தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபியுங்கள்.
- மது அருந்தும் பெண்களை தேவன் சந்திக்கவும், பெண்கள் தேவனுக்காக எழும்பவும், சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.



# ஜூலை 2024

# அரசு வேலைக்காக காத்திருப்போர்

அரசு வேலைக்காக 53 லட்சத்து 74 ஆயிரத்து 116 பேர் பதிவு செய்து காத்திருக்கின்றனர். 18 வயதிற்குள் உள்ள பள்ளி மாணவர்கள் 10 லட்சத்து 69 ஆயிரத்து 609 பேர். 19 முதல் 30 வயதுகுட்பட்ட கல்லூரி மாணவர்கள் 23 லட்சத்து 63 ஆயிரத்து 129 பேர். 31 முதல் 45 வயதுகுட்பட்டவர்கள் 16 லட்சத்து 94 ஆயிரத்து 518 பேர் என தமிழக அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

## ஜெபக்குறிப்புகள்

- வேலை வாய்ப்பிற்காக காத்திருப்போருக்கு தேவன் நல்ல வேலைகளை கொடுக்க ஜெபியுங்கள்.
- வேலையின்றி தவிக்கும் வாலிபர்கள் தவறான முடிவுகள் எடுக்காதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபியுங்கள்.
- படிப்புக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க ஜெபியுங்கள்.
- வேலையின்றி தவிக்கும் பட்டதாரிகளின் குடும்பங்களில் வறுமை நிலை மாறி, ஆசீர்வாதம் உண்டாக ஜெபியுங்கள்.



# Revival IGNiTERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (7th July)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (13th July)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church, Nearby MGM Plaza, [Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

## EVERY 2nd SUNDAY (14th July)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, Grace Auto 1st floor, 163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre, HOREB Complex, 1st Floor, P K N Road, (Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216,
1st Floor, Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3rd SUNDAY (21st July)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
# 5, Gandhi Irwin Road,
Egmore, (Opp. Railway Station)
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road, Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road. 8344433800 |
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (27th July)

**PERAMBALUR**
**(5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (28th July)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD**
**(4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**DHARAPURAM (3:30PM – 6PM)**
2nd Floor, MK Arcade,
Near Bus Stand,
8248283373 | 9442885315

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல்
இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE
STREAMING
Revival
IGNITERS
ON SUNDAY 28th JULY
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS
TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK
ON THE LAST SUNDAY OF EVERY MONTH

எச்சரிப்பின் செய்தி: டேவிட்

# நைசா நரகம்!

பகுதி - 6

Hello Friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போக பிசாசு கையாளும் யுக்தி தான் பாவம். அதில் ஒரு யுக்தியாகிய வெறியைக் குறித்து கடந்த மாதம் தெளிவாக கற்றுக் கொண்டோம். இம்மாதம், சாத்தான் கையாளும் வேறொரு யுக்தியாகிய உதாசீனத்தைக் குறித்து நாம் தெரிந்துக்கொள்ள போகிறோம்.

## உதாசீனம்

உதாசீனம் என்ற வார்த்தைக்கு அலட்சியம் செய்வது என்பது நாம் அறிந்த பொருள். ஆனால் வேதம் கூறும் விளக்கம், ‘‘ஒருவரின் நற்பெயரை கெடுக்கும் நோக்கத்துடன் அவரைப் பற்றி பொய்யான செய்தியை மற்றவர்களிடம் பரப்புவது ‘‘உதாசீனம்’’. உதாசீனத்தை அவதூறு செய்வது, புறங்கூறுவது, அவமதிப்பது, தூற்றுவது என்றும் கூறலாம். எல்லா இடங்களிலும் இந்த பாவம் நடைபெறுவதை நாம் பார்க்க முடியும். சிலர் தன்னுடன் வேலை செய்பவர்களைப் பற்றி மேலதிகாரியிடம் குற்றஞ்சுமத்துவது அவதூறு செய்வது போன்ற காரியங்களை செய்து அவர்கள் நற்பெயரைக் கெடுக்க முயற்சிக்கிறார்கள். இன்னும் சிலர் மற்றவர்களைப் பற்றி இல்லாததை பொல்லாததை சொல்லி அவர்களின் Promotionஐ தடுக்கிறார்கள். குடும்பத்தில்கூட மருமகள் மாமியாரைப் பற்றி தன் கணவரிடமும், மாமியார் மருமகளைப் பற்றி தன் மகனிடமும் புறங்கூறுகிறார்கள். சில வியாபாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் மற்றவரின் வியாபாரத்தை அல்லது தொழிலைக் கெடுக்க தவறான காரியங்களை



பரப்பி மதிப்பிழக்கப் பண்ணுகிறார்கள். இந்தப் பாவம் அரசியலில் சர்வ சாதாரணமாக நடக்கிறது. ஒரு கட்சியைப் பற்றி இன்னொரு கட்சியும், ஒரு அரசியல்வாதியைப் பற்றி மற்றொரு அரசியல்வாதியும் press meetல் அவதூறு செய்து உதாசீனப்படுத்துகிறார்கள். அதுவும் தேர்தல் வந்துவிட்டால் போதும் பிரச்சாரம் என்ற பெயரில் மற்றவர்களைத் தாக்கி தாறுமாறாக பேசுவார்கள். என்னதான் வார்த்தைகள் மூலமாக மற்றவர்களை அவதூறு செய்தாலும், இந்த பாவத்தில் Mediaவிற்கு முக்கிய பங்கு இல்லாமல் இல்லை. Printing Media, Social Media, Television Mediaவில் பிரபலமானவர்களைப் பற்றி அவமதித்து பேசுவது, எழுதுவது நடக்கத்தான் செய்கிறது. இன்னும் சிலர் ஊழியத்தையும், ஊழியர்களையும் குற்றப்படுத்தி, பொய்யான செய்திகளை Media மூலம் பரப்பி ஊழியப் பெயரையும், ஊழியர்களின் பெயரையும் கெடுப்பதோடு மட்டுமல்லாமல் அதன் மூலமாக பணமும் சம்பாதிக்கிறார்கள்.

ஒருவர் இல்லாத நேரத்தில் அவர்களைப் பற்றி குறை பேசுவது புறங்கூறுவதாகும். கிராமத்தில் ஒரு சில பெண்கள் கூடிக் கொண்டு மற்றவர்களின் வீட்டில் நடப்பதைப் பற்றி பேசி புறங்கூறி, பொழுதை போக்குவார்கள். அதிலும் ஊரில் 4 கிழவிகள் ஒன்று சேர்ந்து பேச ஆரம்பித்துவிட்டால் போதும், ஊரே இரண்டாகி விடும். இதில் Highlight ஆன விஷயம் என்னனா, மற்றவர்களைப் பற்றி புறங்கூறி பேசிவிட்டு, ‘‘நமக்கு எதுக்கு டி ஊர் வம்பு பேசாம போலாம் வா’’ என்று சொல்வார்கள். இப்படி நிறைய நிகழ்வுகளை சொல்லிக் கொண்டே போகலாம். இப்படி அவதூறு செய்து, புறங்கூறி மற்றவர்களை அவமதிக்கிறவர்களை தான் ‘‘உதாசீனர்’’ என்று வேதம் சொல்கிறது.

## உதாசீனர், அவதூறு பண்ணுகிறவர்கள், புறங்கூறுகிறவர்கள், அவமதிப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

புறங்கூறுகிறவன் மதிகேடன் (நீதி. 10:18). இந்த மதிகெட்டவன் என்ன செய்வான்? பிறனை அவமதிப்பான் (நீதி. 11:12). பிறனை அவமதிக்கிறவன் பாவம் செய்கிறான் (நீதி. 14:21) என்று வேதம் சொல்கிறது. புறங்கூறுகிறவர்கள் மற்றவர்கள் தங்களை நம்பி சொன்ன இரகசியத்தை வெளிப்படுத்துகிறார்கள் (நீதி. 11:13). அதுமட்டுமல்ல, இனம் இனத்தோடே சேரும் என்று சொல்வார்கள். அதுபோலவே, புறங்கூறுகிறவர்கள் தங்களைப் போலவே புறங்கூறுகிறவர்களிடம் பிரியம் வைக்கிறார்கள் (ரோமர் 1:30,32).

இந்த பாவம் பெருகியிருக்க காரணம் என்னவென்றால், நாம் கடைசி நாட்களில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். கடைசி நாட்களில் மனிதர்கள் 19 விதமான தீயகுணமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று வேதம் சொல்கிறது. அதில் ஒன்றுதான் அவதூறு செய்கிறவர்கள் (2 தீமோ. 3:1-5).

### மற்றவர்களை உதாசீனப்படுத்துவதால் வரும் பாதிப்புகள் என்ன?

உதாசீனப்படுத்துவது பாவம். மனிதர்கள் பாவம் செய்யும் போது ஆசீர்வாதத்தை இழக்கிறார்கள். பாருங்கள், உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நடனமாடின தாவீதை, மீகாள் தன் இருதயத்தில் அவமதித்தாள் (2 சாமு. 6:16). குழந்தை பாக்கியம் தேவன் கொடுக்கும் ஆசீர்வாதம், மீகாள் தாவீதை அவமதித்ததால், அந்த ஆசீர்வாதத்தை இழந்து போனாள் (2 சாமு. 6:23). அதுமட்டுமல்ல, புறங்கூறுகிறவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்கள் என்றும் (ரோமர் 1:30,32), பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனை சங்கரிப்பேன் என்றும் வேதம் சொல்லுகிறது (சங். 101:5). இப்படி மற்றவர்களை இரகசியமாய் அவதூறு பண்ணி குற்றம் சாட்டுபவர்கள் மேல் சாபம் வரும் என்றும் வேதம் சொல்லுகிறது. **“எஜமானிடத்தில் அவனுடைய வேலைக்காரன்மேல் குற்றஞ்சுமத்தாதே, அவன் உன்னைச் சபிப்பான், நீ குற்றவாளியாகக் காணப்படுவாய்” (நீதி 30:10).**

சிலர் இன்னும் ஒருபடி மேலே போய் கர்த்தரையே அவமதிப்பார்கள். திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் (நீதி. 13:13). தேவன் வார்த்தையாய் இருக்கிறார் (யோவான் 1:1). So, கர்த்தரை அவமதிப்பவர்கள் நாசமடைவார்கள். பாருங்கள், எண். 16:30-33ல் கர்த்தரை அவமதித்ததால் பூமி தன் வாயைத் திறந்து அவமதித்தவர்களை உயிரோடு விழுங்கினது.

இந்த ‘‘உதாசீனம்’’ என்கிற பாவம் நாம் வாழும் போது நமக்கு பாதிப்பைக் கொண்டுவருவது மட்டுமல்லாமல் நாம் மரித்த பிறகு நம் ஆத்துமாவை நரகத்திற்குக் கொண்டு செல்லும் வல்லமையுமுள்ளது. உதாசீனர், புறங்கூறுகிறவர்கள், அவதூறு செய்கிறவர்கள் பரலோக ராஜ்ஜியம் செல்ல முடியாது என்று வேதம் சொல்லுகிறது (1 கொரி. 6:10; சங். 15:1-3).

இதை வாசிக்கிற வாலிப சகோதரனே, சகோதரியே! நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிற இந்த காலத்தில் ‘‘உதாசீனம்’’ என்கிற பாவம் சகஜமாக நடப்பதால், இதை பாவம் என்றே அநேகர் உணர்வதில்லை. ஒருவேளை, ‘‘இவ்வளவு நாட்களாக மற்றவர்களை உதாசீனப்படுத்துவது பாவம் என்று அறியாமல் நான் செய்து கொண்டிருக்கிறேன், இந்த பாவத்தை மேற்கொள்வது எப்படி?’’ என்று நீங்கள் கேட்கலாம்.

இன்றைக்கு உங்களை அர்ப்பணித்து, ‘‘இயேசுவே மற்றவர்களை உதாசீனப்படுத்தின என் பாவத்தை மன்னியும், இனிமேல் இந்த பாவத்தை செய்யாதபடி என்னை காத்துக் கொள்ளும்; இதை மேற்கொள்ள எனக்கு கிருபைத் தாரும்’’ என்று கேளுங்கள். இயேசு உங்கள் பாவத்தை மன்னித்து, விடுதலைக் கொடுத்து, இதன் மூலம் வருகிற தண்டனையிலிருந்து உங்களை காப்பாற்றுவார்.

**அன்பான வாலிபர்களே, பிசாசானவன் “உதாசீனம்” என்கிற பாவத்தை செய்ய வைத்து நைசாக நம்மை நரகத்திற்கு கொண்டு போக கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித் திரிகிறான். எனவே, எச்சரிக்கையாயிருந்து, இந்த பாவத்தின் மூலம் வருகிற நரக தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளுங்கள்.**

**Okay Friends, அடுத்த மாதம் நரகத்திற்கேதுவான வேறொரு பாவத்தைக் குறித்து நாம் தெரிந்துக் கொள்ளலாம்.**

தகவல்: காலேப்



# இரயில் பயணம்

## பாகம்-4

அலுவலகத்தில் இருந்த ஆண்டருவின் செல்போன் ஒலித்தது... அவன் எடுத்து பார்த்த போது விக்கி... முக்கியமான டீம் மீட்டிங்கில் இருந்ததினால் ஆண்டருவினால் விக்கியின் அழைப்பை ஏற்க முடியவில்லை... விக்கி தொடர்ந்து 2, 3 முறை அழைத்துக் கொண்டேயிருந்தான்...

அடுத்தநாள் காலை, பீச் - தாம்பரம் செல்லும் இரயிலில்...

**ஆண்ட்ரு:** என்னடா விக்கி, நேத்து அத்தனை முறை கால் பண்ணிருக்க என்ன ஆச்சு?


**விக்கி:** சும்மா தான் டா! எங்கயாச்சும் வெளிய போகலாம்னு தான் அடிச்சேன், ஆமா போன் கூட எடுக்க முடியாத அளவுக்கு என்ன முக்கியமான வேலை?

**ஆண்ட்ரு:** ஆமா டா! முக்கியமான மீட்டிங் தான்... இந்தியா முழுவதிலுமிருந்து கம்பெனி நிர்வாகிகள் வந்தாங்க... இப்போ உலகெங்கும் நடந்து கொண்டிருக்கும் யுத்தங்களினால் பெரிய பொருளாதார பாதிப்பு ஏற்பட்டதில் எங்கள் கம்பெனியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைக்குறித்து விவாதிக்கத்தான்...



**விக்கி:** ஹம்ம்... எந்த பக்கம் பார்த்தாலும் இந்த செய்திதான், இஸ்ரேல்-காசா போர், ரஷ்யா-உக்ரைன் போர், சமீபத்தில் இஸ்ரேல்-ஈரான் போர்... இவையெல்லாம் உலக பொருளாதாரத்தையும், ஏற்றுமதி-இறக்குமதியையும் பெரிதாக பாதித்திருக்கு ஆண்ட்ரு...






**ஆண்ட்ரு:** இதைத் தவிர இன்னும் அநேக நாடுகள் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகள், தென் கிழக்கு ஆசிய நாடுகள் என்று 10 யுத்தங்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலை தற்போது இருக்கிறது. சீனாவிற்கும் – அமெரிக்காவிற்கும் பனிப்போர் ஒருபுறம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

**விக்கி:** இதையெல்லாம் பார்க்கும் போது மூன்றாம் உலக போர் கண்டிப்பா வந்துரும் போலயே... என்ன ஆக போகுதோ? இந்த முறை அநேக நாடுகள் கிட்ட அணு ஆயுதம் இருக்குனு செய்திகள்லாம் வருது...

**ஆண்ட்ரு:** அணு ஆயுதங்கள் பயன்படுத்தினால் எவ்வளவு அழிவு வரும், நெனச்சாலே பயமா தான் இருக்கு...

**விக்கி:** ஒரு யுத்தம் வந்தா எத்தனை உயிர்கள் போகும், பஞ்சம் உண்டாகும், பட்டினி சாவு உண்டாகும்... இதெல்லாம் ஏன் யாரும் யோசிக்கவே மாட்றாங்க... உலகம் அழியப் போகிற நிலைக்கு வந்துருச்சு...

**ஆண்ட்ரு:** உனக்கு ஒரு உண்மைய சொல்றேன் விக்கி, Bibleல மத்தேயு 24ம் அதிகாரத்தில் கடைசி காலத்தில், என்ன நடக்கும் என்று 2000 வருடத்திற்கு முன்பே இயேசு சொல்லிவிட்டார்.

**விக்கி:** என்ன சொன்னார்?

**ஆண்ட்ரு:** கடைசி நாட்களில் மனிதர்கள் மேல் உள்ள அன்பு தணிந்து போகும் என்றும், யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் என்றும் சொல்லிவிட்டு, இதெல்லாம் நடந்தாலும் கலங்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இயேசு சொல்லியிருக்கிறார்...

**விக்கி:** நீ சொல்ற மாதிரி தான் நடந்துகிட்டு இருக்கு (ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியபடி)

**ஆண்ட்ரு:** யுத்தங்கள் நடைபெறுவதும், அதை குறித்த செய்திகள் இந்த காலத்தில வருவதும் எதிர்பார்த்ததுதான், ஆனால் அதே நேரத்தில் ஜெபம் பண்ணி விழித்திருக்க வேண்டும் என்றும் இயேசு சொல்லியிருக்கிறார். இயேசுவின் இரண்டாம் வருகைக்கான முக்கிய அடையாளங்களில் இதுவும் ஒன்று.

**விக்கி:** நீ சொல்றதெல்லாம் கொஞ்சம் நம்புற மாதிரியும் இருக்கு, நம்ப முடியாத மாதிரியும் இருக்கு... (என்று மறுபடியும் யோசிக்க ஆரம்பித்தான்)

(ஆண்ட்ரு இதுவரைக்கும் இயேசுனு சொன்னாலே காதை பொத்திக்கொள்வான். ஆனால் இப்போ கேட்க ஆரம்பிக்கிறான்... தினமும் ஜெபிக்கிற ஜெபம் workout ஆகுது போல என்று தன் மனதில் நினைத்து தேவனுக்கு நன்றி சொன்னான்.)



**ஆண்ட்ரு:** நீயே உலகத்துல நடக்குற எல்லாவற்றையும் பார்த்து யோசிச்சு பாரு... உனக்கே புரிய வரும்...

**விக்கி:** சரி சரி! நாளைக்கு சனிக்கிழமை சாயங்காலம் 4 மணிக்கு turf groundக்கு மறக்காம வந்துரு... நம்ம பிரண்ட்ஸ் எல்லாரும் வரேன்னு சொல்லிருக்கானுங்க... என்று சொன்னபடியே இரயிலிலிருந்து இறங்கிச் சென்றான்...

**ஆண்ட்ரு:** சரி என்று சைகையில் கை அசைத்து சொன்னான்...

*இவர்கள் இருவரின் உரையாடல்கள் தொடரும்...*

தகவல்: வயலா




தேவ சித்தத்தின்படி வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுக்க ஒரு தேவ பிள்ளை முயற்சிகள் எடுக்கும் போது சத்துரு கொண்டு வரும் தடைக்கற்களைப் பற்றி கடந்த மாதத்திலிருந்து தியானித்து வருகிறோம். இந்த மாதத்திலும் சுயவிருப்பம் என்ற தலைப்பின் கீழ் தியானிக்க இருக்கிறோம். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனது வாழ்வைக் குறித்து சுயவிருப்பம் உண்டு. அதற்கு ஏற்றாற்போல் தங்கள் படிப்பு, வேலை, வாழ்க்கை முறை போன்ற காரியங்களை அமைத்துக் கொள்வார்கள். வாழ்க்கைத் துணையைக் குறித்தும் பல சுயவிருப்பங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. விருப்பப்படுவதில் தவறேதும் இல்லை. ஆனால் விருப்பப்படியே நடக்காவிட்டால் வாழவே முடியாது என்று எண்ணுதல் தான் கூடாது.

ஒரு மகளுக்கு ஆசிரிய பணி செய்யும் மகனுடன் திருமணம் நிச்சயிக்கப்பட இருந்தது. ஆனால் திடீரென்று எங்கிருந்தோ வந்த ஒரு செல்வந்தரின் குடும்பம் இந்த மகளையே தங்கள் மருமகளாக்க விரும்புவதாக கூறினர். மணமகளின் பெற்றோரோ எளிய குடும்பமாகிய ஆசிரிய பணி செய்யும் மணமகனே போதும், தெரிந்த குடும்பம், தவறாமல் ஆலயத்திற்கு வரும் தேவ பக்தி நிறைந்த குடும்பம், அளவாய் சம்பாதித்தாலும் நிம்மதியாக வாழலாம் என்ற எவ்வளவோ எடுத்துக் கூறியும் மணமகள் கேட்கவேயில்லை.

செல்வந்தரின் வீட்டில்தான், உயர்ந்த ரக கார் இருப்பதாகவும், மணமகன் அடிக்கடி வெளிநாடு செல்லும் பணியில் இருப்பதால் தானும் வெளிநாடு செல்ல வேண்டும் என்பதே சிறு வயதிலிருந்தே அவளது ஆசை என கூறி ஆசிரிய மணமகனை மறுத்துவிட்டாள். பெற்றோரும், என்ன செய்வது என்று தெரியாமல், உன் இஷ்டப்படியே செய் என்று விட்டுவிட்டனர். திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடந்தது உண்மைதான். திருமணமாகி சில நாட்கள் உயர்ந்த ரக காரில் பயணித்ததும் உண்மைதான். ஒருமுறை வெளிநாடு சென்று வந்ததும் உண்மைதான். ஆனால் சில நாட்கள் ஆன பிறகுதான், தன் கணவரின் மதுபழக்கமும், கோப குணமும் இந்த பெண்ணிற்கு தெரிய வந்தது. செல்வம் இருந்தும், வேலை செய்ய வேலையாட்கள் பலர் இருந்தும் வாழ்க்கையில் சந்தோஷமும் இல்லை, உள்ளத்தில் சமாதானமும் இல்லை. மாறாக, 'எப்பொழுதும் குடித்து விட்டு வந்து சண்டைபோடுவாரோ, அடிப்பாரோ' என்ற பயம் நிறைந்த இருதயத்தோடு இரவெல்லாம் தூங்க முடியாமல் கண்ணீருடன் நாட்களை கழிக்கும் வாழ்க்கையாக இருந்தது. இது தனது



சுயவிருப்பத்தினால் தனக்கு கிடைத்தது என்பதை அவள் அதன்பிறகு தான், உணர ஆரம்பித்தாள்.

மற்றுமொரு குடும்பத்தில் ஒரு மணமகனுக்கு தனக்கு வரப்போகும் மனைவி அதிகமாய் படித்திருக்க வேண்டும், கைநிறைய சம்பாதிக்க வேண்டும் என்று விருப்பம் இருந்தது. அப்படி கிடைத்து விட்டால் தனது குடும்பச் சுமையை அவளும் பகிர்ந்துக் கொள்வாள், தனது வாழ்க்கை இலகுவாக இருக்கும் எனக்கூறி, வரும் வரன்களையெல்லாம் பிடிக்கவில்லை என தட்டிக் கழித்துக் கொண்டே வந்தான். பெற்றோரும் உறவினரும் எவ்வளவோ அறிவுரை கூறியும், கேட்கவேயில்லை. இறுதியாக இந்த மணமகன் கேட்டபடியே கைநிறைய சம்பாதிக்கும் மனைவியே கிடைத்து விட்டாள்.



ஆனால் அவள் சம்பாதிக்கும் பணம் அவள் செலவிற்கே போதுமானதாக இல்லை. விலை உயர்ந்த உடைகள், அணிகலன்கள், காலணிகள் என்று அமேசான் நபர்கள் அனுதினமும் வீட்டிற்கு வந்து கொண்டே இருப்பர். மட்டுமல்ல ''நானும், நீயும் சரிசமமாக தான் சம்பாதிக்கிறோம்'' என்று கூறி கணவரை பெயரிட்டு அழைப்பதும், மனைவியானவள் கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள் எதுவும் செய்வதும் கிடையாது. இப்படியொரு திருமண வாழ்க்கை தனக்கு தேவைதானா என மனம் நொந்துக் கொண்டான் கணவன்.

மணமகளின் / மணமகனின் வெளிப்புறத்தோற்றம், உயர்ந்த படிப்பு, வேலை, ஆஸ்தி, அந்தஸ்து, வெளிநாட்டு மோகம், சுகபோக வாழ்விற்கு மயங்கி, பிடிவாதமாய் திருமண வாழ்வை அமைத்துக் கொள்பவர்களுக்கு இது போன்ற சம்பவங்கள் எச்சரிப்பாய் இருக்கட்டும். திருமணத்திற்கு காத்திருக்கும் வாலிப பிள்ளைகள் ஆசையேப் படக்கூடாது என்று கூறவில்லை. உங்கள் விருப்பத்தை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அதில் சிறப்பான ஆசீர்வாதம் இருக்கிறது. தேவன் சில வேளைகளில் 'சரி' என்று உடனே பதிலளிப்பார். சில வேளைகளில் இது நல்லதல்ல, வேண்டாம் என்று கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கும் தேவை.

வேதாகமத்திலும் தாவீது அரசன் தான் இஸ்ரவேலை ஆளப்போவதை சாமுவேல் தீர்க்கதரிசி செய்த அபிஷேகத்தினால் முன்னமே அறிந்திருந்தார். தன்னை விரட்டி விரட்டி கொலை செய்ய விரும்பிய சவுல் அரசன் மட்டுமல்ல, அவரது மகன்களும் போரில் இறந்த செய்தி அறிந்த போதும், தன் சொந்த தேசத்தில் வசிக்கும் விருப்பம் தாவீதுக்கு இருந்தாலும், அதை தன் தேவனுக்கு தெரியப்படுத்தி, 'யூதாவின் பட்டணங்கள் ஒன்றில் போய் இருக்கலாமா?' என்று தேவனிடம் விசாரித்து, கர்த்தர் 'போ' என்று கூறியப் பின் தான் தன் மனைவிகளை அழைத்துக் கொண்டு செல்கிறார் **(2 சாமு. 2:1)**. பின்னர் தான் அரியணை ஏறி 40 வருட காலம் சிறப்பாய் ஆட்சி புரிகிறார். ஆனால் நியாயாதிபதிகளின் காலத்தில், தேசத்தில் பஞ்சம் உண்டான தினிமித்தம் யூதாவிலுள்ள எலிமெலேக்கு என்னும் மனுஷன் தேவனிடம் விசாரிக்காமல் தன் சுய விருப்பத்தின்படி மோவாப் தேசத்தில் போய் சஞ்சரித்தான். அதனால் மீண்டும் தன் சொந்த தேசத்திற்கு திரும்பவேயில்லை **(ரூத் 1:1,2)**. பெரிய காரியமோ, சிறிய காரியமோ தேவனுக்கு தெரியப்படுத்தி, தீர்மானம் எடுப்பதில் உள்ள ஆசீர்வாதத்தை உணர முடிகிறதா?

**அன்பு பிள்ளைகளே! எந்த ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பும், உங்களுடைய சுயவிருப்பதை விட்டு, தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும்போது, தேவன் ஆசீர்வாதமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பார்.**

அடுத்த மாதம் இன்னொரு NISUIN BERIYTH யுடன் உங்களை சந்திக்கிறேன்.

# செய்திகள்!

## காசா போர் 2024 இறுதி வரை நீடிக்கலாம்: இஸ்ரேல் எச்சரிக்கை



காசா: காசா மீதான போர் இன்னும் ஏழு மாதங்களுக்கு நீடிக்கும் (இந்த ஆண்டு இறுதி வரை) என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலின் போரில் 36,224 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

அக்டோபர் 7, 2023-ஆம் ஆண்டு இஸ்ரேல் - காசா ஆகிய இரு நாடுகளில் இருந்து ஒலிக்கத் தொடங்கிய போர் சத்தம் இன்று வரை ஓயவில்லை. இரண்டு நாடுகளின் அதிகார மையங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் தங்களது இன்னுயிரை துறந்து வருகின்றனர். ஆனால், இன்னும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஹமாஸை அழிக்காமல் ஓயமாட்டோம் என இஸ்ரேல் வீர முழக்கமிட்டு வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை (மே 26) தெற்கு காசாவில் உள்ள ரஃபா நகரத்தில் தற்காலிக முகாம்கள் மீது இஸ்ரேல் படைகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தியது உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனையொட்டி நெட்டிசன்கள் ''ஆல் ஐஸ் ஆன் ரஃபா'' **(All eyes on Rafah)** என்ற ஹேஷ்டேக் சமூக வலைதளங்களில் பரப்பின.

இந்நிலையில், இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இன்று செய்தியாளர்களிடம் கூறுகையில், ''நாங்கள் இப்போது 2024-ன் ஐந்தாவது மாதத்தில் இருக்கிறோம். ஹமாஸ் அமைப்பையும், அதன் அரசாங்கத்தையும் அழிக்க எங்களுக்கு இன்னும் 7 மாத கால அவகாசம் தேவைப்படும். இதனால் போர் குறைந்தது இன்னும் ஏழு மாதங்கள் நீடிக்கும்.

எகிப்து எல்லையில் பெரும் பகுதியை இஸ்ரேல் ராணுவம் கட்டுப்படுத்துவதுடன் ஹமாஸின் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் வகையில் அனைத்தையும் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் காசாவில் போர் இந்த ஆண்டு முழுவதும் தொடரும்'' எனத் தெரிவித்துள்ளார்.

அக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலின் போரில் 36,224 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், 81,777 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸின் தாக்குதலில் இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆக உள்ளது.

– 02 மே, 2024, இந்து தமிழ் திசை.

## ''சட்டத்தின் மீதான நம்பிக்கைக்கு சேதம்''

### – ட்ரம்புக்கு எலான் மஸ்க் ஆதரவு



நியூயார்க்: அமெரிக்க நாட்டின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தேர்தல் நிதியை முறைகேடாக கையாண்ட வழக்கில் குற்றவாளி என அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்தது. இந்நிலையில், ட்ரம்புக்கு ஆதரவாக எலான் மஸ்க் குரல் கொடுத்துள்ளார்.

''நாட்டின் முன்னாள் அதிபர் இதுபோன்ற விவகாரத்தில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார். அதிலிருந்தே தெரிகிறது இந்த தீர்ப்பில் அரசியல் உந்துதல் உள்ளது என்று. இதே நிலை யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இது அமெரிக்க சட்ட அமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கைக்கு பெருத்த சேதமாக அமைந்துள்ளது'' என மஸ்க் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அதிபர் ட்ரம்ப், தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க ஆபாச நடிகை ஸ்டோமி டேனியல்ஸுக்கு சுமார் 1.3 லட்சம் டாலர்களை 2016-ம் ஆண்டுக்கான தேர்தல் பிரச்சார நிதியில் இருந்து கொடுத்ததாக சொல்லப்பட்டது. அதை மறைக்க போலி ரசீதுகளை சமர்ப்பித்தது உறுதியானது. இதையடுத்து 12 ஜுரிகள் அடங்கிய குழு அதை விசாரித்து குற்றவாளி என அறிவித்தது.

– 31 மே, 2024, இந்து தமிழ் திசை.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

BIBLE Treasure Hunt

Q&A

**வேதத்திலிருந்து சில கேள்விகள் விடுகதை வடிவில் கேட்கப்பட்டுள்ளது. சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

## கேள்விகள்

1. சும்மா சுத்தும் ஆசாமிக்கு சோறு போட கூடாதாம், அவன் சோறும் சாப்பிடக் கூடாதாம். அவன் யார்?

2. விருந்துக்கு வந்தவன் செத்துப் போனான், செத்தவன் விருந்துக்கு வந்தான், அவர்கள் யார், யார்?

3. பத்து முறை பந்தாட, மக்கள் எல்லாம் துண்டாட, எதிரிகள் நின்று கொண்டாட, தான் மட்டும் திண்டாட சொல்லடா இவன் யார்?

4. பழுத்த ஓலையைப் பார்த்து குருத்து ஓலை சிரித்ததாம்; பழுத்த இவர் தலையைப் பார்த்து குருத்துக்கள் சில கேலி செய்தன. அவர் யார்?

5. யானைக்கு அடி சறுக்கும், இவனுக்கோ முடி சறுக்கும். இவன் யார்?

6. நான் ஒரு மிருகம், எவ்வளவு தான் தண்ணீர் வந்து என்னைத் தாக்கினாலும், அது என்னை ஒன்றும் செய்யாது. நான் யார்?

7. ஒரு எழுத்துள்ள அரசன் யார்?

8. நாம் சாப்பிடும் காய்கறிகளில் ஒன்றின் பெயர் தீவின் பெயராக உள்ளது. அது எந்த தீவு?

9. ஏபிசிடி படிப்போரே, ஏக் தோ தீன் படிப்போரே இதனை செய்ய முதலில் படியுங்கள், அது என்ன?

10. வேர் விட்டுப் பரவும், விதையின்றி வளரும், வேதனை இதனால் பெருகும், விசுவாசம் இதனால் சரியும். இது என்ன?

### கடந்த மாத விடைகள்

1. எலியா (யாக். 5:17, 18)
2. ஆசா (2 நாளா. 14:8-11)
3. சிம்சோன் (நியா. 15:18, 19)
4. தாவீது (2 சாமு. 7:29)
5. அன்னாள் (1 சாமு. 1:10, 11)
6. மோசே (எண். 12:10, 13)
7. யாக்கோபு (ஆதி. 32:9-11)
8. மனாசே (2 நாளா. 33:11-13)
9. எலிசா (2 இராஜா. 6:18)
10. மனோவா (நியா. 13:8)



### கடந்த மாத வெற்றியாளர்:

சகோதரி நிஷா (சேலம்)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.07.2024**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 06 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

2024

## சுரண்டையில்...

நாள்: ஜூலை 13, சனிக்கிழமை
நேரம் : காலை 10 மணி முதல்
மாலை 4 மணி வரை

இடம்: சீயோன் வளாகம், சுரண்டை

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு : 9750955548, 9443962141,
9443971759

## வேளச்சேரியில்...

நாள்: ஜூலை 14, ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 4 மணி முதல்
7 மணி வரை

இடம்: அட்வெண்ட் மகா சபை பள்ளி வளாகம்,
காந்தி சாலை, வேளச்சேரி, சென்னை - 41

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு : 9488475315,
9884410258

## திருப்பூர் மாவட்டம் - மடத்துக்குளத்தில்...

நாள்: ஜூலை 21, ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 4 மணி முதல்
இரவு 7 மணி வரை

இடம்: திறந்த வேதாகம தேவ சபை,
மடத்துக்குளம்

செய்தியும் ஜெபமும்: சகோ. சதீஷ்குமார்

தொடர்புக்கு : 99427 80243, 98659 19658,
82483 83373.

## பொள்ளாச்சியில்...

நாள்: ஆகஸ்ட் 15, வியாழக்கிழமை
நேரம் : 10 மணி முதல்
மாலை 4 மணி வரை

இடம்: சி.எஸ்.ஐ. ALL ST. CHURCH
பாரிஸ் ஹால்

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு : 94860 37586,
94878 56205



சகோ. அவினாஷ்

சகோ. சதீஷ்குமார்

